டெரிக்பிரின்ஸ்

# சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு கடந்து வருவது எப்படி?

Originally published in English under the title
**"LIFE-CHANGING SPIRITUAL POWER"**

Copyright © Derek Prince Ministries - International

Printed by Derek Prince Ministries
All rights reserved.

TA /5000/0214/LOP
ISBN 978-93-82910-56-5

"HOW TO PASS FROM CURSE TO BLESSING"
(Tamil)
**"SABATHILIRUNTHU AASIRVATHATHIRKU KADANTHU VARUVATHU EPPADI?"**

Published by permission in the Tamil language.

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

Cover Design: DPM-Asia/Pacific

For orders & other enquiries please contact :
**DEREK PRINCE MINISTRIES - INDIA**
C/o DPM IMPEX
1C, EVR Road, Puthur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38205

Derek
Prince
MINISTRIES INDIA
www.derekprince.in

# பொருளடக்கம்

முன்னுரை . . . . 5

**பகுதி 1 : ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் உண்மை**

1. என் சிந்தையைத் தேவன் எவ்வாறு மாற்றினார் ? . . . . 9
2. ஆசீர்வாதங்களும் சாபங்களும் எப்படிச் செயலாற்றுகின்றன . . . . 16

**பகுதி 2 : சாபங்களுக்கான மூல காரணம்**

3. சாபங்களின் காரணராக தேவன் . . . . 27
4. அதிகாரமுள்ள நபர்கள் இடும் சாபங்கள். 42
5. சுயமாய் இடப்பட்ட சாபங்கள் மற்றும் ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு. . . 53
6. சாபத்தின் ஏழு அறிகுறிகள் . . . . 65

**பகுதி 3 : விடுவிக்கப்படுவது எப்படி ?**

7. தெய்வீகப் பரிமாற்றம் . . . . 72

8. விடுதலைக்கான ஏழு படிகள் . . . . 78

9. நிழலிலிருந்து சூரிய ஒளியினிடத்திற்கு. . 86

# முன்னுரை

*உலகத்தின் பல பகுதிகளுக்கு நான் சென்று ஊழியஞ்செய்யும்பொழுது, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளைக் குறித்து இரண்டு வித முக்கியமான கருத்துக்கள் இருப்பதை நான் காண்கிறேன். மேலை நாடுகளில் வசிப்பவர்கள், பல ஆண்டுகளாக பகுத்தறிவுள்ள, விஞ்ஞான ரீதியிலான சிந்தையில் வளர்க்கப்பட்டுள்ளார்கள். இதனால் ஐம்புலன்களால் பெற்றுக்கொள்ளக்கூடாத எந்தக் காரியத்தையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நன்மைக்கோ தீமைக்கோ தங்கள் வாழ்க்கையைப் பாதிக்கக் கூடிய ஓர் இயற்கைக்கு அப்பாற்பட்ட தளம் உண்டு என்பது அவர்களில் அநேகர் அறியாதிருக்கிறார்கள்.*

மறுபக்கம், மேலை நாடுகள் அல்லாத உலகத்தின் மற்றெல்லாப் பகுதிகளிலுமே, பெரிய பட்டணங்கள் ஆனாலும் சரி, சிறிய கிராமங்கள் ஆனாலும் சரி, இயற்கைக்கு அப்பாற்பட்ட உலகம் வெறும் ஒரு தத்துவம் அல்ல என்று அறியும் பெரும் கூட்டம் மக்கள் வாழ்கிறார்கள். அறியாமையைப் பார்க்கிலும் இத்தகைய அறிவு நல்லது என்றாலும், அன்றாட வாழ்க்கையில் இவைகளைச் சந்திக்க வேண்டுமே என்ற பயத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். இதின் விளைவாக,

இப்படிப்பட்ட மக்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற, தேவனுடைய வல்லமைக்கு, தங்களை ஒப்புக்கொடுக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருவதைக் குறித்த இச்செய்தி அநேகருக்குப் பெரும் உதவியாக இருக்கும் என விசுவாசிக்கிறேன். அவர்கள் எங்கே வாழ்ந்தாலும், அவர்கள் பின்னணி எப்படிப்பட்டதாய் இருந்தாலும் இது உண்மையாகும். பல ஆண்டுகளாக நான் இதை நிரூபித்துள்ளேன். இச்செய்தி, பலருடைய வாழ்கையை, சமுதாயங்களை, சபைகளை, முழு தேசங்களையும் மாற்றக் கூடிய வல்லமை நிறைந்தது.

தாங்கள் முற்றிலும் புரிந்துகொள்ளாத ஒன்றோடு அநேகர் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் வெற்றி பெறும் தருவாயில், ஏதோ ஒன்று நிகழ்ந்து அவர்கள் வெற்றியைத் தடுத்து விடுகிறது. முழு வெற்றியுடைய நபராய் இராதபடிக்கும், தாங்கள் விரும்பும் விதத்தில் தேவனுக்கு வெற்றிகரமாக ஊழியஞ்செய்யாதபடிக்கும் காணப்படாத ஏதோ ஒன்று அவர்களைத் தடை செய்கிறது. அது என்னவென்று அவர்கள் கண்டறியாமலும், புரிந்துகொள்ளாமலும் இருக்கலாம். அவர்கள் வாழ்க்கையில் இருக்கும் சாபத்தோடு போராடிக்கொண்டிருப்பதே அவர்கள் பிரச்சனை என நான் நம்புகிறேன்.

இச்செய்தி, சாபங்கள் எப்படி செயல்படுகின்றன, அவைகள் எங்கிருந்து வருகின்றன, மக்கள் அவைகளிலிருந்து விடுபடுவது எப்படி, தேவன் அவர்களுக்காகத் தீர்மானித்த ஆசீர்வாதத்தின் பரிபூரணத்தை அனுபவிப்பது எப்படி என்பதை வேதத்தின் அடிப்படையில் உங்களுக்குக் காண்பிக்கும்.

# பகுதி 1

## ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் உண்மை

*நீங்கள் தொடர்ந்து வரும் வியாதியினாலோ, பணப் பிரச்சனையினாலோ, பிரிந்து போகும் நிலையிலுள்ள குடும்ப உறவுகளினாலோ திகைத்துப் போனீர்களா? உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்கின்றனவா? சிலருக்கு மட்டும் வெற்றியும் மன நிறைவும் பிறரைவிட ஏன் அதிகம் கிடைக்கிறதென்று நீங்கள் நினைத்ததுண்டா?*

ஒவ்வொருவருடைய வாழ்விலும் இரு சக்திகள் கிரியை செய்கின்றன என நான் அறிவேன்: ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள். ஒன்று நன்மையானது, மற்றொன்று தீமையானது. தேவனுடைய ஆசீர்வாதத்தின் பலன்களை அனுபவிக்கவும், சாபங்களிலிருந்து பாதுகாக்கப்படவும் இந்த வல்லமைகள் எப்படிக் கிரியை செய்கின்றன என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சாபம் என்பது, இருளான யுகங்களில் தோன்றின ஒரு மூட நம்பிக்கை அல்ல. சில உண்மையான சம்பவங்களைக்

கூறி, தற்செயலாகவோ பரம்பரையினாலேயோ பொல்லாப்பில் சிக்கிக்கொள்ளவில்லை என்று கண்டறிந்து ஆச்சரியப்பட்ட சில மக்களை உங்களுக்கு எடுத்துக்காட்டாக முன் வைக்க விரும்புகிறேன். சாபம் என்பது உங்கள் மேல் தங்கி, உங்கள் முழு ஆள்தத்துவத்தின் செயல்பாட்டை தடை செய்யும் ஒரு நீண்ட, பொல்லாத கரத்திற்கு ஒப்பிடலாம். அதின் ஊற்று உங்கள் வாழ்நாட்களில் அல்லது உங்கள் முன்னோரின் நாட்களில் தோன்றி இருக்கலாம்.

# 01

# என் சிந்தையைத் தேவன் எவ்வாறு மாற்றினார்

*ஆசீர்வாதங்களும் சாபங்களும் உண்மை என்று இப்போது நான் எவ்வளவு உறுதியாய் இருக்கின்றேனோ, எப்போதும் அப்படி இருந்ததில்லை. அவைகள் வேதாகமத்தில் உள்ள கருத்துக்கள் என்று அறிந்தும், அவைகளின் முக்கியத்துவத்தைக் குறித்து நான் முழுவதும் அறியாதிருந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைப் பயன்படுத்தி, தேவன் என் சிந்தையை மாற்றினார்.*

அமெரிக்காவிலே, ஒரு பிரஸ்பிட்டேரியன் திருச்சபையில் பிரசங்கம் செய்து முடித்த நான், ஒரு குடும்பத்தைக் கவனித்தேன் - தகப்பன், தாய் மற்றும் வாலிப மகள். “அந்தக் குடும்பத்தின் மீது ஒரு சாபம் இருக்கிறது” என்று பரிசுத்த ஆவியானவர் எனக்குச் சொன்னது போல் இருந்தது. இப்படி நினைக்க இயற்கையான காரணங்கள் இல்லை, ஆகையால் நான் அந்தத் தகப்பனிடம் சென்று, “ஐயா, உங்கள் குடும்பத்தின் மீது

ஒரு சாபம் இருப்பதைத் தேவன் எனக்குக் காண்பிக்கிறார். இயேசுவின் நாமத்தில் அச்சாபத்தை உடைத்து, உங்களை விடுவிக்கட்டுமா?" என்று கேட்டேன். உடனே அவர் "சரி" என்று கூறினார்.

ஒரு சுருக்கமான, எளிமையான ஜெபத்தைச் செய்தேன். அவர்களில் ஒருவரையும் நான் தொட்டு ஜெபிக்கவில்லை ஆனாலும், சாபத்தை முறித்து ஜெபிக்கும்போது, ஒவ்வொருவருக்குள்ளும் காணக்கூடிய, சரீரப்பிரகாரமான ஓர் அசைவு உண்டானது. அப்போதுதான் அந்த மகளின் கால், தொடை தொடங்கி, கீழ் பாதம் வரையிலும் மாவுக் கட்டு போடப்பட்டிருப்பதைக் கவனித்தேன். அந்தத் தகப்பனைப் பார்த்து, "உங்கள் மகளின் சுகத்துக்காக ஜெபிக்கட்டுமா?" என்று கேட்டேன். அவர், "சரி! ஆனால் கடந்த பதினெட்டு மாதங்களில், அந்தக் காலை மூன்று முறை முறித்துக்கொண்டாள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். அது சுகம் பெறாது என்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

இன்று, இதைப் போன்ற வார்த்தைகளைக் கேட்டால், அக்குடும்பத்தின் மீது சாபம் இருக்கிறது என்பதை உடனே அறிந்துகொள்வேன். ஒரு எளிமையான ஜெபத்தைச் செய்தேன். சில நாட்களில் அந்தத் தாயார் நன்றி கூறி எனக்குக் கடிதம் எழுதினார்கள். அவர்கள் மருத்துவமனைக்குத் திரும்பச் சென்றபொழுது, எக்ஸ்ரேயின் மூலம், கால் சுகம் அடைந்ததை அறிந்து மாவுக்கட்டை அகற்றினார்கள்.

இச்சம்பவத்தை நான் சிந்தித்த போது, சுகத்திற்காக ஜெபிக்க அனுமதிக்கும் முன், அக்குடும்பத்தின் மீது இருந்த சாபத்தை தேவன் எனக்குக் காண்பித்து, அதை முறிக்க என்னை வழிநடத்தினார் என உணர்ந்தேன். ஏன்?

சாபம் முறிக்கப்படாவிட்டால், அவள் சுகம் பெற்றிருக்கமாட்டாள் என்பதுதான் என்னுடைய முடிவு. அவள் பெற வேண்டிய ஆசீர்வாதங்களைத் தடுத்து நிறுத்தும் காணப்படாத தடையாக அச்சாபம் இருந்தது.

அதற்குப்பின், தேவன் ஆசீர்வாதங்கள் சாபங்கள் என்ற விவகாரத்தைக் குறித்து என்னோடு பேச ஆரம்பித்தார். வேதம் இவைகளை குறித்து எவ்வளவு அதிகமாக பேசுகிறது என்பதைக் கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஆனால் பொதுவாக பிரசங்கங்களில் இதைக் குறித்து நமக்கு அதிகம் கேட்க கிடைப்பதில்லை.

என் சொந்த வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் இந்தக் காணப்படாத தளத்தின் உண்மையை நிரூபித்துக் காட்டியது. 1904ஆம் ஆண்டு சீனாவில் நடந்த “பாக்ஸர்” கலகத்தை அடக்க ஆங்கிலேயருடைய இராணுவம் அனுப்பப்பட்டது. அதில் என்னுடைய தாத்தா ஒரு பிரிவின் தளபதியாக இருந்தார். அவர் திரும்ப வரும்போது சீனக் கலைப் பொருட்களில் சிலவற்றை கொண்டு வந்தார். இவைகள் எங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாக மாறின. என் தாய் மரித்த பின் அவற்றில் சில என்னிடம் வந்தன.

வியப்பூட்டும் விதத்தில் சித்திரத் தையல் வேலை (Embroidery) செய்யப்பட்ட நான்கு பறக்கும் சர்ப்பங்களின் (Dragon) படத்தை எங்கள் வரவேற்பறையில் மாட்டி வைத்தோம். அதே நேரத்தில், ஊழியத்தில் சில எதிர்ப்புகளை நான் உணர ஆரம்பித்தேன். ஆனால், எங்கிருந்து அது வருகிறது என்பதை என்னால் அடையாளம் காண முடியவில்லை. மனச்சோர்வு, பணப் பற்றாக்குறை, ஏமாற்றம் மற்றும் தொடர்புகொள்வதில் பிரச்சனை என்ற விதங்களில் இந்த எதிர்ப்பு வெளிப்பட்டது.

கடைசியாக, தீவிர உபவாச ஜெபத்துக்குப் பின், இந்தப் பறக்கும் சர்ப்பங்களைக் குறித்து என் மனநிலையில் ஒரு மாற்றம் ஏற்படுவதை நான் கண்டேன். வேதத்தில் இம்மிருகம் யாரைக் குறிக்கின்றது என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். தெளிவாக இது சாத்தான்தான். இத்தகையப் பொருட்கள் என் வீட்டில் இருக்க ஏற்றதல்ல என்று உணர்ந்த நான், கீழ்ப்படிதலின் அடையாளமாக அவைகளை அகற்றினேன்.

இதைத் தொடர்ந்த மாதங்களில் என் பொருளாதாரத்தில் தெளிவான முன்னேற்றம் காணப்பட்டது. இந்த அனுபவத்தைத் தியானிக்கையில், உபாகமம் **7:25-26**ஐக் குறித்து எனக்குப் புதிய வெளிப்பாடு கிடைத்தது. இதில் கானானியருடைய விக்கிரக ஆராதனையுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று மோசே இஸ்ரவேல் மக்களை எச்சரித்தார்.

> *அவர்கள் தேவர்களின் விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரிக்கக்கடவாய்; நீ அவைகளால் சிக்கிக்கொள்ளாதபடிக்கு, அவைகளில் இருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அதை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பாயாக; அவைகள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள். அவைகளைப் போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டு போகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது.*

பொய்யான தெய்வத்தின் உருவத்தை என் வீட்டுக்குள்ளே கொண்டு வந்ததினால் அறியாமலேயே என்னையும், என் குடும்பத்தையும் நான் சாபத்துக்குத்

திறந்து வைத்தேன். நான் ஈடுபட்டிருந்த காரியத்தை குறித்து, பரிசுத்த ஆவியானவர் என் கண்களைத் திறந்ததற்காக மிகவும் நன்றியுள்ளவனானேன்.

என் சொந்தப் பொருளாதார முன்னேற்றத்தையும், உடைந்த காலுடைய பெண் ஆரோக்கியம் அடைந்ததையும் இணைக்கும் ஒரு கோட்பாட்டை நான் காண ஆரம்பித்தேன். இரண்டு சம்பவங்களிலும் காணப்படாத தடையாக ஓர் சாபம் இருந்தது. விடுதலையின் ஜெபத்தோடு, சுகமும் வந்தது, என்னுடைய விஷயத்தில் பொருளாதார விடுதலை ஏற்பட்டது.

ஆசீர்வாதங்கள் சாபங்களின் உண்மையை வெளிப்படுத்தும் இன்னொரு சம்பவத்தை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்த போது, ஒரு யூதப் பெண்ணைச் சந்தித்தேன், அவளை “மிரியாம்” என்று நாம் அழைக்கலாம். அவள் இயேசுவை விசுவாசிக்கிறவள், இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் பெற்றவள். மிகவும் திறமையுள்ளவள், நல்ல சம்பளம் பெறும் ஒரு வேலை. ஜெபத்தின் விளைவாக வேலை கிடைத்து, தன் சொந்தத் தொழிலுக்கு அதிபராக இருந்த ஒரு மனிதனுக்குப் பணியாற்றினாள். அவரும், அந்தத் தொழிலில் பணியாற்றின எல்லாக் கம்பெனி காரியதரிசிகளும், ஒரு பெண் தீர்க்கதரிசியால் நடத்தப்பட்ட ஏதோ ஒரு வித்தியாசமான மதப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சில நாட்களுக்குள் அறிந்துகொண்டாள்.

சில காலம் சென்ற பின்பு, அவளுடைய மேல் அதிகாரி, ‘‘எங்கள் பெண் குரு எங்கள் மேல் ஆசீர்வாதங்களைக் கூறி இருக்கிறார், அவைகளை நீ எங்களுக்கு “டைப்” செய்து கொடுக்க வேண்டும்” என்று

கேட்டுக்கொண்டார். ஆனால் அவைகள் ஆசீர்வாதங்களே அல்ல என்று சிறிது நேரத்தில் மிரியாம் கண்டுபிடித்தாள். அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவள் என்பதினாலே அவைகளை ''டைப்'' செய்ய விருப்பமில்லை என்று தன் மேல் அதிகாரிக்கு விளக்கம் சொன்னாள். அவர் நல்லெண்ணம் கொண்டவராக, அவள் மனசாட்சியைப் அது பாதித்தது என்பதை உணராததற்கு மன்னிப்புக் கோரினார்.

ஆனால் உடனடியாக மிரியாமின் எல்லா விரல்களும் சுருண்டுகொண்டு நிமிர்த்தக்கூடாமல் இறுக்கமாயின. நிமிர்த்த முடியாதபடியால், வேலையும் செய்ய இயலவில்லை. வேதனை அதிகமானபடியால் தூங்கவும் முடியவில்லை. மருத்துவர் அதைக் கீல் வாத மூட்டுவியாதி (rheumatoid arthritis) என்று கூறினார்.

''சாபங்கள்: காரணங்களும், விடுதலை பெறும் வழிகளும் . . . . '' என்ற தலைப்புடைய என் செய்திகளைக் கேட்டிருந்த, அவளுடைய சிநேகிதி, அந்த ஒலி நாடாக்களை அவளுக்கு கொடுத்தாள். விடுதலையின் ஜெபத்தில் நான் மக்களை வழிநடத்துகிற குறிப்பிட்ட இடம் வரை, ஒலி நாடா நன்றாக வேலை செய்தது. திடீரென்று ஒலி நாடா சிக்கிக்கொண்டது. அதை வெளியே எடுக்கவும் இயலவில்லை.

அதுவரை சந்தேகத்தோடு, தன் சிநேகிதியை பிரியப்படுத்தவே மிரியாம் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியாக, தன் சிநேகிதி அச்சிட்டு வைத்திருந்த விடுதலையின் ஜெபத்தைச் செய்ய அவள் சம்மதித்தாள். ஜெபத்தைச் செய்து முடிக்கும் முன், விரல்கள் விடுதலை பெற்று, எல்லா வேதனையும் நீங்கிப்போனது.

அதே மருத்துவர் மறுபடியும் அவளைப் பரிசோதித்து, முற்றிலும் சுகம் பெற்றாள் என்று உறுதிப்படுத்தினார்.

சாபத்திலிருந்து விடுதலைக்கான ஜெபம் மட்டுமே செய்யப்பட்டது. சுகத்திற்காக ஜெபிக்கப்படவில்லை என்பதை நீங்கள் மனதிற்கொள்ள வேண்டும்.

நம்முடைய பின்னணி எப்படிப்பட்டதாய் இருந்தாலும், ஆசீர்வாதங்கள் சாபங்களின் முழு தளமும், கடந்து போன இருளான காலங்களில் உண்டான ஏதோ ஒரு ஆதி காலத்து மூட நம்பிக்கை அல்ல என்பதைப் புரிந்துகொள்வது நமக்கு மிக முக்கியமானது. இது உண்மையானது, தம்முடைய மக்களுக்கு இதைக் குறித்த தெளிவான அறிவு உண்டாயிருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். இதனால் வெற்றியுடன், தேவனுடைய முழு ஆசீர்வாதத்தையும் அனுபவித்து நாம் வாழ முடியும்.

02

# ஆசீர்வாதங்களும் சாபங்களும் எப்படிச் செயலாற்றுகின்றன

*நம்முடைய வாழ்க்கையில் ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒழுங்கற்ற விதத்தில், முன்னறிவிப்பில்லாமல் செயலாற்றுவதில்லை. மாறாக, இரண்டுமே மாற்றமில்லாத நித்திய சட்டங்களின்படியே செயற்படுகின்றன. சரித்திரத்தை உருவாக்கும் இரண்டு பரிமாணங்கள் உள்ளன: காணப்படுகிறவைகள் மற்றும் காணப்படாதவைகள். இவ்விரண்டு பரிமாணங்களின் பரிமாற்றங்கள் தான் நிகழ்வுகளின் முடிவைத் தீர்மானிக்கின்றன. காணப்படுகிற, இயற்கையானவைகளின் மேல் மட்டும் நம்முடைய கவனத்தைச் செலுத்துவோமானால், சில காரியங்கள் எப்படி நிகழுகின்றன என்பதை நாம் விளக்க முடியாது.*

இயற்கையான, சரீரப் பிரகாரமான உலகத்தில் நாம் எல்லாரும் சுகமாக இருக்கிறோம் ஏனென்றால் அது நமக்கு அன்றாடம் பழக்கமானதொன்று. பெரும்பாலான மக்களுக்கு இதற்கு மேல் ஒன்றும் தெரியாது. ஆனால் வேதம் காணப்படாத, வேறொரு பரிமாணத்தை எடுத்துக்

காட்டுகிறது. இது சரீரப்பிரகாரமானதல்ல, ஆவிக்குரியதாகும்.

2 கொரிந்தியர் 4:18இல் பவுல் இவ்விரு தளங்களையும் குறித்துக் கூறுகிறார்:

> *ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.*

இயற்கையானவைகள் நிலைப்பதில்லை, காணப்படாத தளத்தில்தான் நிலைக்கும் உண்மையை நாம் கண்டடைய முடியும். இங்கேதான் நம்முடைய எதிர்காலம் உருவாகிறது.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் காணப்படாத ஆவிக்குரிய தளத்துக்குரியவைகள். அவைகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வல்லமையைச் சுமக்கின்றன. ஆசீர்வாதங்கள் நல்ல, முன்னேற்றத்திற்குரிய விளைவுகளையும், சாபங்கள் தீமையான, பின்னடைவை ஏற்படுத்தும் விளைவுகளையும் கொண்டு வருகின்றன. இவ்விரண்டு கருப்பொருட்களும் வேதத்தில் உள்ளன.

இவ்விரண்டிற்கும், இரண்டு முக்கியமான சிறப்பு அம்சங்கள் பொதுவாக உள்ளன. முதலாவது, ஆசீர்வாதங்கள் சாபங்களின் செயற்பாடு, ஒரு தனி நபரைத் தாண்டி, அவர்களுடைய குடும்பத்தினர், சமுதாயம், இனத்தார் அல்லது முழு தேசத்தையும் கூட பாதிக்கலாம்.

இரண்டாவதாக, ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒரு சந்ததியிலிருந்து அடுத்து வரும் சந்ததிகளுக்குத் தொடர்ந்து செல்கின்றன. அவைகளின் செயற்பாட்டைத் தடுக்க ஏதாகிலும் செய்யப்படும்வரை அவைகள் தொடரும் இதற்கு முக்கியமான செயல் முறை

விளைவுகள் உண்டு. ஆசீர்வாதங்கள் அல்லது சாபங்களின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் நபர், அவைகள் எங்கிருந்து வருகின்றன என்பதை நிதானிக்க முடியாது ஏனென்றால் அதின் ஆரம்பம் கடந்த காலத்தில், அல்லது நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து கூட வரலாம்.

ஒரு முறை ஆஸ்திரேலியா நாட்டின் அடிலேட் பட்டணத்தில், இதைக் குறித்து நான் பிரசங்கம் செய்த பின்பு ஒரு பெண் எனக்குக் கடிதம் எழுதினாள். அவளுடைய முன்னோர்கள், ஸ்காட்லாந்து தேசத்தில் உள்ள நிக்ஸன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். ஸ்காட் மக்களுக்கும், இங்கிலாந்து தேசத்துக்கும் இடையிலான இனப் போராட்டங்களினால், 16ஆம் நூற்றாண்டில், சர்ச் ஆஃப் ஸ்காட்லாந்தின் போராயர் நிக்ஸன் இனத்தின் மீது ஒரு சாபமிட்டார். நான்கு நூற்றாண்டுகளுக்குப்பின் தன் குடும்பத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைக் கவனிக்கும்போது, அவைகள் அந்தச் சாபத்தினால்தான் நேர்ந்தன என அவர்களால் உணர முடிந்தது.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நிறைந்த வார்த்தைகள் - தேவனுடைய வல்லமையாக இருக்கலாம், பிசாசின் வல்லமையாகவும் இருக்கலாம் - இவைகள் மக்களுடைய வாழ்க்கையில் செயலாற்றி அவர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடியவைகள். அது மட்டுமல்ல, இவைகளின் விளைவுகள் தலைமுறை தலைமுறையாகத் தொடரக்கூடும்.

ஆனால், ஒரு காரியத்தை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். நீங்கள் சாபத்தின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருந்தால், தேவன் ஏற்கெனவே அதின் தீர்வை உங்களுக்காக ஏற்பாடு செய்திருக்கிறார். நீங்கள் அதின் விளைவினால்

தொடர்ந்து அவதிப்படத் தேவையில்லை. அதற்கு முன், இதை குறித்து, ஒரு முழுமையான விளக்கத்தை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன்.

## ஆசீர்வாதங்களின் ஊற்றாக தேவன்

ஆசீர்வாதங்கள் நமக்குப் பல்வேறு வாய்க்கால்களின் வழியாக வந்தாலும், தேவன் ஒருவரே அதின் மேலான ஊற்றாக இருக்கிறார். வேதத்தில் ஆசீர்வாதங்கள் முதல் முறையாக செயலாற்றுவதை நாம் ஆதியாகமம் 22இல் காண்கிறோம். தேவனுடைய விருப்பத்திற்கு பதிலளிக்கும் வண்ணமாக, ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைப் பலியிட ஆயத்தமாய் இருந்தான். கடைசி தருணத்தில் தேவன் ஒரு ஆட்டை ஈசாக்குக்குப் பதிலாக பலியிடப்படும்படி செய்தார்.

> கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.
>
> **ஆதியாகமம் 22:15-18**

ஆபிரகாம் தேவனுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்ததே ஆசீர்வாதத்திற்கான காரணம் என்பதை மிக முக்கியமாக கவனிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதத்துக்கு அடிப்படைக் காரணம் இதுவே. இந்த ஆசீர்வாதம் ஆபிரகாமின் எல்லாச் சந்ததியினரிடமும் வரும் என்பதைக் கவனியுங்கள்.

ஈசாக்கு வயது சென்றவனாய் இருந்தபோது, தன் குமாரனாகிய யாக்கோபை ஆசீர்வதித்த சம்பவம் ஆதியாகமம் 27ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஈசாக்கு தன் முதற்பேறான குமாரனாகிய ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்தான். ஏசா மான் இறைச்சியை வேட்டையாடி கொண்டு வரச் சென்றிருந்தான், அதைச் சாப்பிட்டுவிட்டு ஆசீர்வாதம் கூற ஈசாக்கு விரும்பினான். ஈசாக்கின் மனைவி ரெபேக்காள், இத்தருணத்தைத் தனக்குப் பிரியமான இளைய குமாரன் யாக்கோபுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

ஈசாக்கை ஏமாற்ற (அவன் குருடாய் இருந்தான்) யாக்கோபுக்கு ஏசாவின் உடைகளை அணிவித்து, ஆட்டு மயிரை அவன் கைகளிலும் கழுத்திலும் சுற்றினாள் ஏனென்றால் யாக்கோபைவிட ஏசா அதிக ரோமம் உள்ளவன். ஈசாக்குக்குப் பிடித்த முறையில் இளம் ஆட்டுக்குட்டியைச் சமைத்தாள். யாக்கோபு ஏசாவைப் போல் நடித்து, தன் தகப்பனிடத்தில் அதை எடுத்துக் கொண்டு போனான். ஈசாக்கு உறுதிப்படுத்திக்கொள்ள, “நீ உண்மையிலேயே என் குமாரனாகிய ஏசாதானா ?” என்று கேட்டான்.

யாக்கோபு அவன்தான் என்று கூறும்போது, பொய் சொன்னான். ஈசாக்கு அதை நம்பினபடியால் சாப்பிட்டு, ஆசீர்வாதத்தைக் கூறினான்.

இதோ, என் குமாரனுடைய வாசனை கர்த்தர்

ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப் போல் இருக்கிறது. தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக. ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவுங்கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்; உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்; உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தான்.

**ஆதியாகமம் 27:27-29**

அந்த ஆசீர்வாதத்தின் ஆற்றல் மிகவும் வல்லமையுள்ளதாக இருந்து, தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து சென்றது.

பின்பு, ஏசா மான் இறைச்சியுடன் வந்து, அதைத் தன் தகப்பனுக்குக் கொடுக்க முயற்சிக்கின்றான். ஈசாக்கு தான் ஏமாற்றப்பட்டு, ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபை ஆசீர்வதித்து விட்டோம் என்பதை உணருகிறான். ஆனால் ஈசாக்கின் செயலைக் கவனித்துப் பாருங்கள்.

அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவை எல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப் பட்டவனாகவும் இருப்பான் என்றான்.

**ஆதியாகமம் 27:33**

ஈசாக்கு ஏசாவை ஆசீர்வதிப்பதாக நினைத்தான், ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் தன்னுடையவை அல்ல, அவை தீர்க்கதரிசனமான வார்த்தைகள், அவைகளைத் திரும்பப் பெற முடியாது என்பதை அறிந்திருந்தான். ஆகையால் யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட்டான், ஏசா ஆசீர்வதிக்கப்படவில்லை.

ஆசீர்வாதத்தின் தன்மை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்பதை நீங்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். வெறும் கற்பனை அல்லது அன்பான உணர்ச்சியோ அல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலுடையதாய், மக்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற ஒன்று. ஆசீர்வாதங்கள், சாபங்கள் என்ற இரண்டிற்குமே இது உண்மையாகும்.

ஆசீர்வாதங்களும் சாபங்களும் என்னென்ன தோற்றங்களை எடுக்கக்கூடும் என்பதை உபாகமம் 28ஆம் அதிகாரம் முழுவதிலும் நாம் காண முடியும். முதல் பதினான்கு வசனங்கள் ஆசீர்வாதங்களையும், மீதமுள்ள ஐம்பத்து நான்கு வசனங்கள் சாபங்களை குறித்தும் விவரிக்கின்றன. முதல் இரண்டு வசனங்களில் ஆசீர்வாதத்திற்கான பிரதான காரணத்தை மோசே கூறுகிறார்: *"இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால்... நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்போது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்குப் பலிக்கும்."*

அதே போல், யோவான் 10:27இல், புதிய உடன்படிக்கையின் கீழ், இயேசு "தன்னுடைய ஆடுகள்" என்று ஏற்றுக்கொண்டவர்களை அல்லது அவருடைய

உண்மையான சீஷர்களை விவரிக்கும்போது: *"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன... அவைகள் எனக்குப் பின்செல்லுகின்றன"* என்று கூறுகிறார். அடிப்படைத் தகுதி தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, கீழ்ப்படிந்து அவருக்குப் பின் செல்லுவதுதான்.

சாபங்களின் காரணம் ஆசீர்வாதங்களுக்கு நேர் எதிரிடையானது. தேவனுடைய சத்தத்துக்குச் செவி கொடுக்காமலும், அதின்படி செய்யாமலும் இருப்பதே சாபத்துக்குக் காரணமாகும். தேவனுடைய சத்தத்தைக் கேட்காமல், கீழ்ப்படியாமல் இருப்பதை ஒரே வார்த்தையில் அடக்கலாம்: கலகம் - மனிதனுக்கு விரோதமாக அல்ல, தேவனுக்கு விரோதமான கலகம்.

என்னுடைய சொந்த வேத ஆராய்ச்சியிலிருந்து, உபாகமம் **28**இன் வரிசைப்படி, ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் சுருக்கமாகக் கூறும் இரண்டு பட்டியல்களைக் கொடுக்க முயற்சித்துள்ளேன். என் பட்டியல் இதுவே:

- உயர்வு
- ஆரோக்கியம்
- பெருக்கம்
- செழிப்பு
- வெற்றி
- தேவ தயவு

சாபங்களின் பட்டியலை, மோசே ஆசீர்வாதங்களைவிட அதிகமாக விவரிக்கின்றார். அடிப்படையாக சாபங்கள் ஆசீர்வாதங்களுக்கு எதிரிடையானவை. இதுதான் என்னுடைய கருத்து:

- அவமானம்
- மலட்டுத்தன்மை, பெருக்கமின்மை
- மன ரீதியிலான மற்றும் சரீரப் பிரகாரமான வியாதி
- குடும்ப உறவுகளின் முறிவு
- தரித்திரம்
- தோல்வி

- ஒடுக்கப்படுதல்
- தேவ தயவின்மை

**13**ம் வசனத்தில், ஆசீர்வாதங்களின் பட்டியலை ஒரு தெளிவான சொல்லோவியத்தோடு மோசே முடிவுக்குக் கொண்டு வருகிறார். இச்சித்திரத்தை நம்முடைய வாழ்க்கையில் எப்படி அனுபவமாக்குவது என்பதைச் சிந்திப்பது நமக்கு நல்லதாகும்.

அவர், ''கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார் . . . " என்று சொல்லுகிறார். இது என்னுடைய வாழ்க்கையில் எப்படிச் செயற்படும் என்பதை எனக்குக் காட்டும்படி, நான் ஒருமுறை தேவனிடம் கேட்டேன். தேவன் எனக்கு தந்த பதில் இதுதான்: *தலையானது எல்லா தீர்மானங்களையும் செய்கிறது, வால் அதற்குப்பின் இழுக்கப்பட்டுச் செல்கின்றது*.

நீங்கள் தலையைப் போல, ஒவ்வொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்தி, சரியான முடிவுகளை எடுத்து, அவைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுத்துகிறீர்களா **?** அல்லது வாலைப் போல, உங்களால் கட்டுப்படுத்த முடியாத, புரிந்துகொள்ள முடியாத சக்திகளினாலும் சூழ்நிலைகளினாலும் இழுக்கப்பட்டுச் செல்கின்றீர்களா **?**

# பகுதி 2

## சாபங்களுக்கான மூல காரணம்

*ஒவ்வொரு சாபத்துக்கும் எப்போதும் ஒரு காரணம் உண்டு என்பதை, சாலொமோன் நீதிமொழிகள் 26:2ல் தெளிவுபடுத்துகிறார்.*

**அடைக்கலான் குருவி அலைந்துபோவது போலும், தகைவிலான் குருவி பறந்துபோவது போலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது.**

இக்கோட்பாட்டிற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒரு பக்கம் காரணமேயில்லாமல், எந்தச் சாபமும் பலிக்காது. மறுபக்கம், இதன் எதிர்மறையும் உண்மைதான். எங்கே சாபம் கிரியை செய்தாலும், அதற்கு ஓர் காரணமுண்டு. சாபங்களுக்கான காரணங்களையும், தோன்றும் இடத்தையும் சுட்டிக்காட்ட, நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளும் பகுத்தறிவு அவசியமாய் இருக்கிறது. உங்கள் பிரச்சனைக்கான மூல காரணத்தை நீங்கள் கண்டுபிடித்தால், அதை ஏற்ற விதத்தில்

எதிர்கொள்ள நீங்கள் ஆயத்தமாயிருப்பீர்கள்.

பொதுவாக, நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய முக்கியமான சாபங்களுக்கான காரணங்களை இப்பகுதி விவரிக்கின்றது. இதைப் படித்த பின், தொடர்ந்து வரும் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள தேவனுடைய தீர்வை (பரிகாரம்) நீங்கள் நன்கு புரிந்து, உங்கள் வாழ்க்கையில் அதை பயன்படுத்த முடியும்.

# 03

# சாபங்களின் காரணராக தேவன்

*பழைய ஏற்பாட்டில் தேவன் கோபாக்கினை மற்றும் நியாயத்தீர்ப்பின் தேவனாகவும், புதிய ஏற்பாட்டில் அன்பு மற்றும் இரக்கத்தின் தேவனாகவும் தோற்றமளிப்பதாக அநேகர் நினைக்கின்றார்கள். இவ்வாறு தேவனுடைய குணாதிசயங்களைத் தவறாக புரிந்துகொள்ளுதல், அவர்களுக்கு ஓர் தடையாக அமைகின்றது.*

ஆனால் வேதத்தின் இரு பகுதிகளும் ஒன்றோடொன்று ஒத்திருக்கின்றன. தேவனைக் குறித்து, பிழையற்ற அறிவு நமக்கு வேண்டும். ரோமர் 11:22ல் தேவனுடைய இவ்விரண்டு குணாதிசயங்களையும் பவுல் சுட்டிக்காட்டுகிறார். ''ஆகையால் தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்.'' அவருடைய ஆசீர்வாதங்கள் தயையிலிருந்தும், நியாயத்தீர்ப்புகள் கண்டிப்பிலிருந்தும் புறப்படுகின்றன. இரண்டும் ஒரே அளவுக்கு உண்மையானவைகள்.

பல நேரங்களில் தேவன் தனிப்பட்ட நபர்களின் மீதோ,

முழு தேசங்களின் மீதிலோ சாபங்களை கூறியுள்ளார். அவருடைய நோக்கம், மக்களின் கவனத்தை ஈர்த்து, கீழ்ப்படியாமைக்கு வரும் பயங்கரமான விளைவுகளைக் குறித்து எச்சரிப்பதாகும். சாபம் என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் மிகக் கடினமான ரூபமானாலும், அதினிமித்தம் மக்கள் மனந்திரும்பி அவரிடத்தில் வருவதையே தேவன் விரும்புகிறார்.

ஆதியாகமம் 12இல், தேவன் ஆபிரகாமை அழைக்கும்போது, முதல் முறையாக, சாபத்துக்குக் காரணராக தோற்றமளிக்கிறார். அவனுடைய அழைப்புக்கு ஏழு படிகள் இருந்தன. அவற்றில் ஆறு, தேவனுடைய ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தங்கள் ஆனால் அதில் ஒரு கடுமையான எச்சரிப்புமுண்டு.

1. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்
2. உன்னை ஆசீர்வதிப்பேன்.
3. உன் பெயரை பெருமைப்படுத்துவேன்.
4. ஆசீர்வாதமாய் இருப்பாய்
5. உன்னை ஆசீர்வதிக்கின்றவர்களை நான் ஆசீர்வதிப்பேன்.
6. உன்னைச் சபிக்கிறவனை நான் சபிப்பேன்.
7. பூமியிலுள்ள சகல வம்சங்களும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

**ஆதியாகமம் 12:1-3**

## யூதரை விரோதித்தல்

தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த அழைப்பின் ஆறாவது பகுதியை சிந்தித்து பாருங்கள்: *அவனைச் சபிக்கும் யாவர் மீதும் ஒரு சாபம்*. இது ஆபிரகாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் செல்லுபடியாகும். தேவன் ஒரு மனிதனை ஒரு விசேஷித்த வேலைக்கென்று

அழைக்கும் போது, அந்த மனிதன் சாத்தானின் எதிர்ப்புக்குக் குறிப்பான இலக்காக மாறிவிடுகிறான் ஆகையால் தேவன் அவனைப் பாதுகாக்கும்படி ஏற்பாடு செய்கிறார்.

பின்பு ஆதியாகமம் 27:29இல் ஈசாக்கு தன் மகனாகிய யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது, அதே பாதுகாப்பை அவனுக்கும் நீட்டிக்கிறார், "உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டிருப்பார்களாக". ஆகையால் தேவன் ஆபிரகாம் மீது கூறின அதே ஆசீர்வாதமும் சாபமும் அவன் சந்ததிக்கும் உரியதானது. யூத மக்களையும், இஸ்ரவேல் நாடு முழுவதையும் இது நேரடியாக உட்படுத்துகிறது என காண்பது மிக அவசியமானது.

சத்துருக்கள் ஆபிரகாமையும் அவன் சந்ததியையும் சபிப்பதையோ துன்புறுத்துவதையோ தேவன் அசாத்தியமாக்கவில்லை. ஆனால், அப்படிச் சபித்தால் அதற்குப் பயங்கரமான விளைவுகள் ஏற்படும் என்பதை மட்டும் தீர்மானித்தார். யூதரை விரோதித்தவர்களின் துன்பகரமான சரித்திரம் இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டாக உள்ளது. யூதரை விரோதித்தல் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும்.

துரதிர்ஷ்டவசமாக, பல நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ சபையே கேவலமான யூத விரோதத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்துள்ளது. ஆனால், தாங்கள் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமும், அவர்கள் பகைக்கும் அந்த யூதரின் நிமித்தமாகத்தான் வந்தது என்பதை சபை உணராதிருக்கிறது. யூதர் இல்லாமல், சபைக்கு அப்போஸ்தலர்கள் இருந்திருக்க மாட்டார்கள், வேதமும் இருந்திருக்காது, இரட்சகருமிருந்திருக்கமாட்டார்.

ஒரு வேளை நீங்களோ உங்கள் முன்னோர்களோ யூதருக்குச் சத்துருக்களாக இருந்திருக்கலாம். நீங்கள் அவர்களை ஏளனமாக பேசி சபித்திருக்கலாம். அக்கிரியைகளுக்கு விளைவுகள் உண்டு; உங்கள் வாழ்க்கையில் சாபத்தைக் கொண்டு வரும். ஆனால் நீங்கள் விடுதலை பெறலாம்.

## கீழ்ப்படியாமை

உபாகமம் 27:11-26ல், இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் வந்தவுடன், சில காரியங்களில் தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர்கள் மீது வரக்கூடிய பன்னிரெண்டு சாபங்களைக் கூற வேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார். கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதத்துக்கும், கீழ்ப்படியாமைக்கான சாபத்துக்கும் தங்களை ஒப்புக்கொடுக்காமல் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. இவ்விரண்டிற்கும் நடுநிலையான வேறெந்த நிலையும் இல்லை. வேறெதையும் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு இடம் அளிக்கப்படவுமில்லை.

பன்னிரெண்டு குறிப்பிட்ட, விரிவான சாபங்கள் பட்டியலிடப்பட்டன, அவைகளை இந்தத் தலைப்புகளின் கீழ் நாம் கொண்டு வரலாம்.

- விக்கிரகாராதனையும், பொய்யான தெய்வங்களை வணங்குதலும்
- பெற்றோரை கனவீனப்படுத்துதல்
- கள்ளத்தனமான அல்லது இயற்கைக்கு முரணான பாலியல் உறவுகள்
- பெலவீனமான மற்றும் உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்

## விக்கிரகாராதனையும், பொய்யான தெய்வங்களை வணங்குதலும்

யாத்திராகமம் 20:3ல், பத்துக் கட்டளைகளில் "உன் தேவனாகிய கர்த்தர் நானே...என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்......ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" என்று தேவன் முதன்மையாக கட்டளையிட்டார். ஆகையால் பொய்யான தெய்வங்களை வணங்குவதும், எவ்வித விக்கிரகாராதனையும் தேவனுக்கு விரோதமான கீழ்ப்படியாமையாகும். முதல் சிருஷ்டிப்பிலும், பின்பு வேதத்திலும் பூரணமாக வெளிப்படுத்தப்பட்ட மெய்யான தேவன், பரிசுத்தமுள்ளவரும், வியக்கத்தக்கவரும், மகிமையுள்ளவரும், எங்குமுள்ளவருமாய் இருக்கிறார். படைக்கப்பட்ட எந்த மனித அல்லது மிருகத்தின் உருவத்தாலும் அவரைப் பிரதிபலிப்பது, வேண்டுமென்றே அவரை அவமானப்படுத்துவதாகும். ஆகையால் இது தேவனுடைய கோபாக்கினையைத் தூண்டிவிடுகிறது.

> *கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன்*
> **உபாகமம் 27:15**

ஆனால், இரண்டாம் நிலையில், வெளியரங்கமாக விக்கிரக ஆராதனையின் தோற்றமில்லாமல், விரிவான எல்லைகளுள்ள சில செயல்கள் உள்ளன. அவைகள் மதத்தைச் சார்ந்தவைகளும் அல்ல. ஏனென்றால் அவைகளின் உண்மையான தன்மை, திசை திருப்புகிற சொற்களினாலே மறைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு

“மாந்திரீகம்” என்ற பெயர் ஏற்றதாயிருக்கும் (லத்தீன் மொழியில் இவ்வார்த்தையின் அர்த்தம் “மறைவான அல்லது மூடி மறைக்கப்பட்ட” என்பதாகும்). இத்தகைய மாந்திரீக செயல்கள், அறிவுக்கான ஆசை மற்றும் வல்லமைக்கான ஆசை என்னும் மனித சுபாவத்தின் இரண்டு வலிமையான, அடக்க முடியாத மோகங்களை மையமாக வைத்துச் செயல்படுகின்றன. இயற்கையான வழிகளாலும், ஊற்றுகளாலும் இவ்விரண்டு ஆசைகளையும் ஓர் அளவிற்கு, மனிதன் திருப்தி செய்ய முடியும். ஆனால் இப்படி பெற்றுக்கொண்டதில் அவனுக்கு திருப்தி ஏற்படாவிட்டால், நிச்சயமாக அவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊற்றுகளுக்குத் திரும்புவான்.

காரணம் என்ன? இப்பிரபஞ்சத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானத்துக்கும், வல்லமைக்கும், இரண்டே ஊற்றுகள் உள்ளன: தேவன் அல்லது சாத்தான். இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானமும் வல்லமையும் தேவனிடத்திலிருந்து வந்தால், அது முறையானது; சாத்தானிடமிருந்து பெற்றதானால், அது முறைகேடானது. விலக்கப்பட்ட நன்மை தீமையை அறியத்தக்க விருட்சத்திலிருந்து இந்த முறைகேடான ஞானத்தை வாஞ்சித்ததுதான், ஏதேன் தோட்டத்தில் மனிதனுடைய முதல் மீறுதலுக்குக் காரணமானது. அப்படிச் செய்ததினால் மனிதன் காணப்படாத ஓர் எல்லையைத் தாண்டி, சாத்தானின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் நுழைந்துவிட்டான். அந்நேரத்திலிருந்து மனிதன் வஞ்சகத்துக்கு விழுந்து போகிறவனாக மாறினான்.

இத்தகைய முறைகேடான மாந்திரீக செயல்கள் எடுக்கக்கூடிய தோற்றங்களுக்கு எண்ணிக்கையே இல்லை. ஆனால் மூன்று பிரதான கிளைகளை நாம் அடையாளம் காண முடியும்: பில்லிசூனியம், மந்திரவாதம் மற்றும் குறிசொல்லுதல்.

பில்லிசூனியம் மாந்திரீகத்தின் "வல்லமை" கிளையாக விளங்குகிறது. 1 சாமுவேல் 15:23இல் இதன் வேர் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "இரண்டகம்பண்ணுதல் (அல்லது கலகம்) பில்லிசூனியப்பாவத்துக்குச்....... சரியாய் இருக்கிறது, தேவனுடைய சட்டத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்காமல், தான் விரும்புவதைச் சாதிக்க, இது மனிதனுடைய முயற்சியாகும். மனிதர்களையும் சூழ்நிலைகளையும் கட்டுப்படுத்த விரும்பும் ஆசையே இதை இயக்கும் சக்தியாகும். இதைச் சாதிக்க, மனரீதியிலான அழுத்தங்கள் அல்லது மனோதத்துவ முறைகள் பயன்படுத்தி, அல்லது இரண்டையும் கலந்து பயன்படுத்தி, மனிதர்களைக் கட்டுப்படுத்தி, பயமுறுத்தி, செயலாற்ற வைக்கலாம்.

*குறிசொல்லுதல்* மாந்திரீகத்தின் *"அறிவு"* கிளையாக விளங்குகிறது. இயற்கையான முறைகளில் பெற முடியாத அறிவின் தோற்றங்களை அளிக்கிறது. பொதுவாகக் நாம் காணும் ஒரு தோற்றம் - ஜோஷியம் சொல்லுவது - வருங்காலத்தைக் குறித்து இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஞானத்தை அளிக்கிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதாரத்திலிருந்து தோன்றின எல்லா பொய்யான மத வெளிப்பாடுகளும் இதில் அடங்கும்.

*மந்திரவாதம்* அல்லது சூனியம், பொருட்களின் மூலம் அல்லது ஐம்புலன்களைப் பாதிக்கும் போதை பொருட்கள், இசை போன்றவற்றின் மூலம் செயல்படுகிறது. வெளி 9:21ல் ''சூனியங்கள்'' (மந்திரவாதம்) என்ற வார்த்தை, ''போதை'' பொருட்களுக்கான கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பல விதமான பொருட்கள் பயன்படுத்தப்படலாம்; புனித சின்னங்கள், தாயத்துக்கள், மந்திரிக்கப்பட்ட கயிறு அல்லது பொருட்கள், "ஒய்ஜா" பலகைகள் – ஒரு சில உதாரணங்களாவன. புத்தகங்களும் மந்திரவாதத்தின் வாய்க்கால்களாக இருக்கலாம் என்பதை

புரிந்துக்கொள்வது மிகவும் முக்கியமானது. எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்கள் (அப்போஸ்தலர் 19:18,19) தங்கள் அடிமைத்தனத்துக்கு மந்திரவாத புத்தகங்களே காரணமென உணர்ந்து, அவைகளின் மதிப்பு அதிகமாக இருந்தாலும், எல்லாவற்றையும் எரித்துப்போட்டார்கள். இவ்விதமாக மந்திரவாதத்தின் பொருட்களை எரித்துப் போடுவதே அவைகளை கையாளும் சிறந்த முறையாகும்.

மந்திரவாதத்தில் பாவம் செய்வோர், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானத்தையும், வல்லமையையும் பிசாசினிடத்தில் நாடுகிறார்கள். இதைத் தேவன், தம்மைத் தவிர, வேறொருவரிடமும் நாட அனுமதிப்பதில்லை. இப்படிச் செய்கிறதினாலே, அவர்கள் ஒரே மெய்யான தேவனோடு, சாத்தானையும் ஒரு தெய்வமென்று ஏற்றுக்கொண்டு, பத்துக் கற்பனைகளில் முதலாம் கற்பனையை முறித்துப்போடுகிறார்கள்.

இச்செயலினால், தேவன், தன்னுடைய கற்பனைகளை முறித்துப்போடுகிற யாவர்மேலும் கூறும் சாபத்துக்குத் தங்களை ஒப்புவிக்கிறார்கள் - இச்சாபம் நான்காம் தலைமுறை வரைக்கும் செயல்படும். விக்கிரகாராதனை, பொய்யான தெய்வங்களை வணங்குதல் அல்லது எந்த மந்திரவாதச் செயலிலும் ஈடுபடுவதினால், வரக்கூடிய சாபத்தை இஸ்ரவேல் அனைத்தும் தங்கள் மீது கூறிக்கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. இதுதான் இன்றும் மக்களுடைய வாழ்வில் சாபத்துக்கான பிரதான காரணமாக இருக்கிறது. இத்தகைய செயல்களில் ஈடுபட்டால், *“மூன்று தலைமுறைகளுக்கு அதை விசாரிப்பேன். உன்னிடத்தில் மட்டுமல்ல, உன் சந்ததியின் மூன்று தலைமுறைகளிடத்திலும் விசாரிக்கப்படும்”* என்று தேவன் கூறுகிறார்.

ஆகையால் உங்கள் பெற்றோர், உங்கள் தாத்தா பாட்டி அல்லது அவர்களுக்கும் முன் இருந்த யாரோ ஒரு

முன்னோர் செய்த கிரியையின் பலனால் நீங்கள் இப்போது அவதிப்பட்டுக்கொண்டிருக்கலாம். உங்கள் பிரச்சனைக்குத் தீர்வைக் காண அதை முதலில் கண்டறிவது எவ்வளவு முக்கியம் என்பதை இப்போது உணருகின்றீர்களா ?

இப்படிப்பட்ட ஊற்றிலிருந்து வரும் எந்தச் சாபமானாலும், விடுதலை பெற தேவன் ஒரு வழியை ஏற்படுத்தியதற்காக அவருக்கு நன்றி! அவர் நம்முடைய விடுதலைக்காக ஏற்பாடு செய்துள்ளார். கணக்குப் பார்க்கும் கடைசி நாளில், நம்முடைய முன்னோர் நம்மீது கொண்டு வந்த சாபத்துக்குத் தேவன் நம்மிடத்தில் கணக்கு கேட்க மாட்டார் ஆனால் அச்சாபத்திலிருந்து விடுபட தேவன் ஏற்படுத்தியதைப் பெற்றுக்கொள்ள மறுத்தால், நிச்சயமாக நம்மைக் குற்றவாளியென்று தீர்ப்பார்.

## பெற்றோரைக் கனவீனப்படுத்துதல்

இச்சூழ்நிலையில் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மற்றவர்களுடைய கிரியைகளினாலே நமக்குப் பிரச்சனைகள் நேரிட்டது உண்மையாக இருந்தாலும், நாமே காரணமாய் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு மற்றவர்கள் மேல் பழியைச் சுமத்தக் கூடாது.

நம்முடைய பெற்றோரோடு இருக்கும் உறவைப் பார்க்கும்போது, அதிகக் கவனம் தேவையாயிருக்கிறது. பெற்றோரைக் கனவீனப்படுத்துதல் தேவனுடைய சாபத்தைக் கொண்டு வரும் என்பதை கிறிஸ்தவர்கள் உட்பட இன்றைக்கு எண்ணற்ற மக்கள் அறியாதிருக்கிறார்கள். பெற்றோரைக் குறித்த, தவறான மனநிலையோடிருப்பதால், அவர்களுடைய வாழ்க்கையில் பல பிரச்சனைகள் நேரிடுகின்றன. எந்தப் பெற்றோரும் பிழையற்றவர்களல்ல, ஆனாலும் அவர்கள் கனத்தைப்

பெற தகுதியுள்ளவர்களல்லவென்று அர்த்தமாகாது. வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை இப்படி வெளிப்படுகிறது, “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே, உன் வாழ்நாட்கள் நீடித்திருக்கும்படி, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக”.

என் முழு ஊழியத்திலும், பெற்றோரைக் கனவீனப்படுத்தி, வாழ்க்கையில் நன்மையைப் பெற்ற ஒருவரையும் நான் சந்தித்ததில்லை. அவ்விதமான நடத்தை தானாகவே உங்களை ஒரு சாபத்துக்கு ஒப்புக்கொடுக்கிறது. உங்கள் பெற்றோரோடு அல்லது நீங்கள் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லும் ஒவ்வொரு காரியங்களோடும் நீங்கள் ஒத்துப்போக வேண்டுமென்று அர்த்தமல்ல ஆனால் அவர்களை உங்கள் பெற்றோராக கனப்படுத்த வேண்டும். பெற்றோரைக்குறித்து, தங்கள் மனநிலையை சரிப்படுத்திக்கொண்டவுடன், வாழ்வில் மாற்றத்தை கண்ட அநேகரை நான் சந்தித்திருக்கிறேன்.

அதே நேரத்தில், இதைச் செய்யாமல், ஆசீர்வாதத்தை இழந்த பலரைக் குறித்தும் நான் நினைத்துப் பார்க்கிறேன். என் குடும்பத்தில் 40 வயதில் புற்றுநோயால் இறந்து போன ஒரு நபரை நினைவு கூறுகிறேன். அவர் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்று, ஆண்டவரை சேவித்தார். ஆனால் தன் தாயோடு இருந்த உறவை சரிப்படுத்தாமல் போனதின் காரணமாக, அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கவில்லை. தன் தாயோடு இருந்த உறவைச் சரிப்படுத்தியிருந்தால், பிரச்சனைகளிலிருந்து அவன் தப்பித்திருக்கலாம். நான் வெறும் தத்துவங்களை போதிக்கவில்லை, அனுபவத்தில் உண்மையென்று கண்டவைகளையே போதிக்கிறேன்.

## தவறான அல்லது இயற்கைக்கு முரணான பாலுறவு

இயற்கையல்லாத எந்தப் பாலுறவின் தோற்றமாக இருந்தாலும், அது ஒரு சாபத்தைக் கொண்டு வரும். ஓரினச்சேர்க்கை மற்றும் மிருகங்களோடு பாலுறவின் எந்தத் தோற்றத்தையும் இது உட்படுத்தும். அனுமதிக்கப்பட்ட எல்லைகளுக்குப் புறம்பே, குடும்பத்தின் நபர்களோடு பாலுறவும் சாபத்தைக் கொண்டு வரும். தற்காலத்தில், எண்ணற்ற பிள்ளைகள் சொந்த தகப்பனுடைய பாலியல் பலாத்காரத்துக்கு பலியாகிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

## பெலவீனர், உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்

அமெரிக்க அரசாங்கம், பழங்குடி இனத்தவர்களாடு செய்த பல ஒப்பந்தங்களை நிறைவேற்றாமல், தொடர்ந்து முறித்து வந்தபடியால், அவர்கள் வெள்ளை மாளிகையின் மீது சாபமிட்டனர். ஆகையால் **1860** முதல் **1980** வரை, ஒவ்வொரு **20**ம் ஆண்டும், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பதவியிலேயே மரணமடைந்தார்கள். அதின் பின்னணியில் இரண்டு காரணங்கள் உள்ளன. அமெரிக்க இந்தியர்களுக்கு அரசாங்கம் காண்பித்த உண்மையற்ற நிலை, இன்னொன்று **1860**ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆபிரகாம் லிங்கன், ஆவிகளோடு தொடர்பு கொள்ளும் கூட்டத்தை வெள்ளை மாளிகையில் நடத்த, தன் மனைவிக்கு அனுமதி கொடுத்த சம்பவம். இதனால் அவர் பிற்காலத்தில் மனநோயாளியாக மருத்துவமனையில் மரித்தார். இத்தகைய செயல்களில்

ஈடுபடுதல் ஒரு தனி நபரை மட்டுமல்ல, முழு தேசத்தையும் எப்படி பாதிக்கிறதென்பதைக் கவனித்துப் பாருங்கள்.

ஜனாதிபதி ரீகனும் பதவியிலேயே மரித்திருப்பார் – ஜனாதிபதியான சில நாட்களிலேயே அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. ஆனால் அவர் ஜனாதிபதியாக பதவியேற்கும் முன், ஒரு கூட்டத்தில் நாங்கள் பெரிய குழுவாக இணைந்து அவரையும் ஜனாதிபதியின் பதவியையும் அந்தச் சாபத்திலிருந்து விடுவித்து ஜெபித்தோம். அச்சாபம் நிறைவேறும்படி எவ்வளவு கிட்டினது பாருங்கள்; குண்டு அவருடைய இருதயத்திலிருந்து ஒரு அங்குலம் தூரத்தில்தான் பாய்ந்தது. ஆனால் தேவன் சாபத்தை முறித்தார் என்பதற்கு அதுவே அடையாளமென்று கருதுகிறேன். இது ஒரு காணக்கூடாத தத்துவமல்ல, இக்காரியங்கள் மக்களுடைய வாழ்க்கையையும், தேசங்களையும் எவ்விடத்திலும் பாதிக்கின்றன.

## சுயத்தைச் சார்ந்துகொள்ளுதல்

எரேமியா 17:5,6ல் முற்றிலும் வேறுபட்ட ஒரு சாபம் காணப்படுகின்றது:

> **மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

[அதற்கு வரும் சாபம் இதோ]

> **அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன**

*செடியைப் போலிருந்து, நன்மை வருகிறதைக் காணாமல்,*
*வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும்,*
*குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.*

சாபத்தின்கீழ் வாழுகிற மனுஷனுக்கு இது மிகவும் இயல்பான ஒன்று. எல்லார் மேலும் மழை (ஆசீர்வாதம், செழிப்பு) பெய்யும்போதும், அதின் நடுவில் அவன் மட்டும் வறட்சியான நிலத்தில் வாழ்ந்து, ஆசீர்வாதத்தை அனுபவிக்கிறதே இல்லை**?** ஏன்**?** சாபத்தினாலே. மனிதத் திறமை, பொருள், சொத்து, இவைகளின் மீது நம்பிக்கை வைத்து, தேவனை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனிதன், சபிக்கப்பட்டவன். பொல்லாப்புச் செய்ய வேண்டுமென்ற வாஞ்சை இங்கே காணப்படவில்லை. ஆனால் தேவனைவிட்டுத் தனித்து நிற்க வேண்டுமென்ற வாஞ்சையை வெளிப்படுத்துகிறது. இப்படிப்பட்டவர்கள் நீதியான செயல்களைச் செய்ய நாடுவார்கள் ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய கிருபையைச் சார்ந்துகொள்ள மாட்டார்கள்.

இந்தச் சாபம், தேவனுடைய கிருபையை ருசித்துவிட்டு, பின்பு தங்கள் சுய முயற்சிகள், அறிவாற்றல் மற்றும் மதத்தைச் சாரும்படி திரும்பின பல சபைகள் மீது இன்றுமுள்ளதென்று நம்புகிறேன். கலாத்தியரைப் போல இவர்கள் "ஆவியில் ஆரம்பம்" செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் மாம்சத்தில் முடிவு பெற்றிருக்கிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதம் அகன்று, அவர்கள் மீது சாபம் இறங்கியிருக்கிறது. சாபத்தின் கீழ் இருக்கும் பல சபைகளில் நான் பேசியிருக்கிறேன். எவ்வளவு பிரசங்கம் செய்து, போராடி, யுத்தம் செய்தாலும், சாபம் முறிக்கப்படாமல், பலனைக் காணவே முடியாது.

## களவும், பொய்யாணையிடுதலும்

பழைய ஏற்பாட்டின் கடைசி மூன்று தீர்க்கதரிசிகளாகிய ஆகாய், சகரியா மற்றும் மல்கியா, எந்தெந்தப் பகுதிகளில் இஸ்ரவேல் தேவனுடைய சாபத்தின் விளைவுகளைச் சந்தித்ததென்று எழுதுகிறார்கள். சகரியா **5:1-4**ல் இருபக்கமும் சாபங்களுள்ள ஒரு சுருளைக் குறித்துத் தீர்க்கதரிசிக்குத் தரிசனம் உண்டானது. ஒரு பக்கத்தில் திருடினவனும், மறுபக்கத்தில் தேவனுடைய நாமத்தில் பொய்யாணையிட்டவனும் இருந்தார்கள்.

இந்தச் சாபத்தின் விளைவாக ஏற்படும் அழிவைக் குறித்த ஒரு தெளிவான சித்திரம் இதைப் பின் தொடருகிறது. "வீடு" என்ற எபிரெய வார்த்தை வெறும் கட்டிடத்தை மட்டுமல்ல, அதில் வாழும் மக்களையும் குறிக்கின்றது.

மனந்திரும்புதலும், சீர் பொருந்துதலுமில்லாமல், முழு தேசங்கள், முழு சமுதாயங்களை இது அரித்துப் போடக்கூடும். திருடி, பொய்யாணையிட்டவர்களை உட்படுத்தினால், எத்தனை பேர் சாபத்தின் கீழிருப்பார்களென்று சிந்தித்துப் பார்க்கிறேன். எத்தனை பேர் தங்கள் வருமான வரி செலுத்துவதில் உண்மையற்று காணப்படுகிறார்கள்? ஒவ்வொரு தேசத்திலும் அநேகர் இந்தப் பிரிவின் கீழ் வருவார்கள், அவர்களில் எத்தனை நபர்கள் திருச்சபைக்குச் செல்லுகிறவர்களாவார்கள்?

ஆகாய் **1:4-6** இதே போல், மக்கள் அதிகம் விதைத்து, கொஞ்சம் அறுத்து, பொத்தலான பையில் போடுவதைக் குறித்துப் பேசுகிறது. இஸ்ரவேலுக்கு தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அவர்களுடைய ஆசீர்வாதங்களைத் தடை செய்துகொண்டிருந்தது ஒரு சாபம் என உணர்த்த வேண்டியதாயிற்று. தங்கள்

சுயநலமான விருப்பங்களைத், தேவனுடைய வீட்டின் தேவைகளுக்கும் மேல் வைத்திருந்ததே அச்சாபத்திற்கு காரணம்.

04

# அதிகாரமுள்ள நபர்கள் இடும் சாபங்கள்

*நாம் பார்த்தது போல, ஆசீர்வாதங்களும் சாபங்களும், நம்முடைய வாழ்க்கையைப் பாதிக்கின்ற பரந்த, காணக்கூடாத ஆவிக்குரிய தளத்தின் பகுதியாக உள்ளன. இந்தத் தளத்தில் நிர்ணயிக்கக்கப்பட்டவைகளை நிறைவேற்றும் மிக முக்கியமான காரியமாக "அதிகாரம்" விளங்குகிறது. அதிகாரத்தின் கோட்பாடுகளைச் சரியாக புரிந்துகொள்ளாமல், ஆவிக்குரிய தளத்தில் பலனுள்ளவர்களாய் நாம் செயலாற்ற முடியாது.*

## தேவனுடைய பிரதிநிதிகளான மனிதர்கள்

முழுப் பிரபஞ்சத்திலும், அதிகாரத்துக்கு ஒரே ஒரு மேலான ஊற்றுதான் உண்டு: சிருஷ்டிகரான தேவன். தேவன் தம்முடைய அதிகாரத்தை நேரடியாகப் பயன்படுத்தாமல், அதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கிறார். தேவனுடைய சார்பாக அத்தகைய மனிதர்கள் பயன்படுத்தும் அதிகாரத்தில், ஆசீர்வதிக்க

மற்றும் சபிப்பதற்கான அதிகாரமும் இணைந்திருக்கிறது.

இந்த நூற்றாண்டில் அதிகாரத்துக்கு விரோதமாக உலகளாவிய ஒரு கலகத்தை நாம் கண்டிருந்தாலும், புவியீர்ப்பின் கோட்பாடு தவறாது செயலாற்றுவதுபோல, அதிகாரத்தின் கோட்பாடுகளும் தவறாது செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

தேவனுடைய பிரதிநிதிகளான மனிதர்களின் உதாரணமே, இந்தக் கோட்பாட்டை எடுத்துக்காட்ட போதுமானதாகும். யோசுவா 6:26இல், இஸ்ரவேல் மக்கள் எரிகோ பட்டணத்தை அற்புதவிதமாக பிடித்தபோது, யோசுவா அதைத் திரும்ப எடுத்துக் கட்டுகிறவன் மீது ஒரு சாபமிட்டான். இது சுமார் கி.மு.1300ஆம் ஆண்டு சம்பவித்தது. 1 இராஜாக்கள் 16:34ல் நாம் வாசிக்கும்போது, ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின், பெத்தேல் ஊரானாகிய ஈயேல் அதே இடத்தைத் திரும்பக் கட்ட முயற்சித்தான். தன் இரு பிள்ளைகளின் ஜீவனையும் அதினிமித்தம் இழக்கக் நேரிட்டது. எந்த மருத்துவக் காரணங்களும் இல்லாமல் அவர்கள் மரித்துப் போனார்கள். எந்த மருத்துவரும் அதைக் கண்டறிய முடியவில்லை. ஆனால் இது யோசுவா கூறின சாபத்தின் நேரடி விளைவாக இருந்தது. உங்கள் வாழ்க்கையிலும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சம்பவித்த ஒன்றின் விளைவுகளை நீங்கள் எதிர்கொண்டிருக்கலாம்.

இன்னொரு உதாரணம், சவுல் மற்றும் யோனத்தான் மரித்த பின்பு தாவீது பாடின பாடலின் வார்த்தைகளிலுள்ளது [2 சாமுவேல் 1:21]. தாவீது அதிகமாகச் சபிக்கிறவன் — நான் இக்காலத்து அர்த்தத்தில் இதைச் சொல்லவில்லை. சில மக்கள் மேல் சில பயங்கரமான சாபங்களை அவன் கூறினான்; ஆனாலும் இது தேவனுடைய மனிதனின் ஊழியத்தின் ஒரு பங்காகும்.

சவுல் மற்றும் யோனத்தானைக் குறித்து அவன் பாடின அழகான பாடலில் இப்படிச் சொன்னான்:

> *கில்போவா மலைகளே! உங்கள் மேல் பனியும் மழையும் பெய்யாமலும் காணிக்கைக்கு ஏற்ற பலன்தரும் வயல்கள் இராமலும் போவதாக; அங்கே பராக்கிரமசாலிகளுடைய கேடகம் அவமதிக்கப்பட்டது; சவுல் தைலத்தால் அபிஷேகம்பண்ணப்படாதவர்போல அவர் கேடகமும் அவமதிக்கப்பட்டதே.*

இந்த வார்த்தைகள் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன் பேசப்பட்டவைகள் ஆனால் இன்றைக்கும் நீங்கள் கில்போவா மலைகளுக்குச் செல்வீர்களானால், அங்கே பச்சையான மரம், செடி, கொடி ஒன்றையும் காணமாட்டீர்கள். இஸ்ரவேல் நாட்டு அரசாங்கம் அங்கே காடுகளை மறுபடியும் வளர்க்கக் கருத்தாய் முயற்சி செய்தும் ஒன்றும் வளரவில்லை. 3000 ஆண்டுகளுக்கு முன் தாவீது பேசின வார்த்தையினால்தான் இப்படி நடந்தது.

எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? கேயாசி, எலிசாவுக்குக் கீழ்ப்படியாமல், சிறிது நேரத்திற்கு முன்பு, அற்புதமாய் சுகத்தைப் பெற்றிருந்த நாகமானிடத்திற்கு ஓடிப்போனான். பணத்தையும், உடைகளையும் அவனிடம் கேட்டு, இவைகளை எலிசாவுக்கு மறைத்து வைத்தான். அவன் திரும்ப வந்தபோது, எலிசா, "என் ஆவி உன்னோடுகூட போகவில்லையா?" என்று கேட்டான். "ஆகையால், நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும்" என்றான். அவன் உறைந்த மழையின் நிறமான குஷ்டத்தால் மூடப்பட்டு, அவன் சமூகத்தைவிட்டுப் புறப்பட்டுப் போனான் (2 இராஜாக்கள் 5:27). எதன் விளைவாக

இது நடந்தது? தேவனுடைய மனிதன் கூறின சாபமே.

## உறவினால் அதிகாரமுடைய மக்கள்

சாபங்களின் இன்னொரு முக்கியமான ஊற்று இருக்கிறது. தேவன், மனித சமுதாயத்தில் ஏற்படுத்தின முறைமையின்படி, சில சூழ்நிலைகளில் ஒரு நபருக்கு மற்றொரு நபர் மீதோ, சில மக்கள் மீதோ அதிகாரம் இருக்கிறது.

மிக வெளிப்படையாய் இருக்கிற உதாரணம் – தகப்பன். தேவனுடைய வார்த்தையின்படி அவருக்குத் தன் குடும்பத்தின் மீது அதிகாரமிருக்கிறது. மக்கள் அதில் பிரியமாயிருப்பதோ, பிரியமில்லாமலிருப்பதோ அதற்கு எதிர்த்துப் போராடுவதோ போராடமலிருப்பதோ முக்கியமில்லை – உண்மையென்னவென்றால், அவருக்குத் தன் குடும்பத்தின் மீது அதிகாரமிருக்கிறது. அதை அவர் பயன்படுத்த தவறினால், அது அவருடைய பிரச்சனை.

அதிகாரமுடைய இன்னொரு நபர், கணவன். இவருடைய அதிகாரம் மனைவி மீது. அவர்கள் மிக நெருங்கின உறவிலுள்ளவர்கள். வேதம் சொல்லுகிறது: தேவன் கிறிஸ்துவுக்குத் தலையாயிருக்கிறார், கிறிஸ்து கணவனுக்குத் தலையாயிருக்கிறார், கணவன் மனைவிக்குத் தலையாயிருக்கிறார். பெண்களின் விடுதலைக்காகப் போராடுகிறவர்கள் இதைக் குறித்து என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் இது சத்தியம் என்பதுதான் உண்மை. அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதினால் உண்மையை மாற்ற முடியாது.

யாக்கோபு மற்றும் அவன் குடும்பத்தின் சம்பவத்தைப் பாருங்கள். யாக்கோபு, தன் மாமனாகிய லாபானைப் பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் சேவித்தான். இரண்டு மனைவிகள், மறுமனையாட்டிகள் மற்றும்

பதினோரு பிள்ளைகளைப் பெற்றிருந்தான். தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணின தேசத்துக்குத் தப்பியோட முடிவுசெய்தான். லாபான், தன்னுடைய குமாரத்திகளாகிய அவனுடைய மனைவிகளைத் திரும்ப உரிமைகோருவானோ என்ற பயத்தால் யாக்கோபு இரகசியமாகத் தப்பியோட முடிவு செய்தான்.

அவர்கள் தப்பியோடியபோது, யாக்கோபின் இரண்டாவது மனைவியாகிய ராகேல், தன் தகப்பனுடைய "வீட்டு தெய்வங்களைத்" திருடிக்கொண்டாள். அவரும் அக்கடவுள்களை வைத்திருக்கக் கூடாது, இவளும் அவைகளைத் திருடியிருக்கக் கூடாது, ஆனால் திருடினாள். லாபானுக்கு இது கோபமூட்டினபடியால், அவன் அவர்களைப் பின்தொடர்ந்து பிடித்து, தன் கடவுள்களைத் திருடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டினான்.

ராகேல் செய்ததை அறியாதிருந்த யாக்கோபு குற்றம் சாட்டப்பட்டதினிமித்தம் கோபமடைந்தான். ஆதியாகமம் **31:38**ல் அவன், ''யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ அவனை உயிரோடே விட வேண்டாம்'' என்று கூறினான். அறியாமல் யாக்கோபே தன் மனைவிமீது கூறின சாபமாக இது மாறியது.

துன்பகரமான காரியம் என்னவென்றால், இவைகள் வெறும் வார்த்தைகளல்ல, உறவினால் உண்டான அதிகாரம் நிறைந்த வார்த்தைகள். பேசின வார்த்தைகளினால் அவன் தன் மனைவியின் விதியை தீர்மானித்தான். அடுத்த முறை அவளுக்கு குழந்தை பிறந்தபோது, பிள்ளைப்பேற்றிலே அவள் மரித்துப்போனாள். எவ்வளவு தெளிவை உண்டாக்கும் ஓர் சம்பவம்!

இதே போன்ற செல்வாக்கையுடைய ஒரு பங்கைத் தகப்பன்மார்கள் செயல்படுத்துகிறார்கள். வாழ்க்கையில்

தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு அடுத்து, மிகவும் விரும்பத்தக்க ஒன்று, ஒரு தகப்பனுடைய ஆசீர்வாதம் தான். மிகவும் அஞ்சத்தக்க ஒரு காரியம் தகப்பனுடைய சாபம். அநேக தகப்பன்மார் அறியாமலேயே தங்கள் பிள்ளைகளைச் சபிக்கிறார்கள். அச்சாபத்தை எதிர்கொண்டு அதிலிருந்து வெளியே வருவதற்கு நான் அநேகருக்கு உதவி செய்தபடியால் இதை நான் அறிவேன்.

மூன்று பிள்ளைகளை உடைய ஒரு தகப்பனைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். முதலாவதும் மூன்றாவதும் மிகவும் திறமைசாலிகள் ஆனால் நடு பிள்ளை அவ்வளவு அறிவாளியல்ல. தகப்பனுக்கும் அவன் மேல் அதிக பிரியமில்லை. (நான் பெற்றோரைக் குறித்துக் கவனித்த ஓர் காரியமுண்டு - பொதுவாக தங்களைப் போல இருக்கும் பிள்ளையையே அவர்கள் அதிகமாக விரும்பமாட்டார்கள். தங்கள் சுபாவத்தில் எதைக் குறித்துப் பயப்படுகிறார்களோ, அதை பிள்ளைகளிடத்தில் காண அவர்கள் பிரியப்படுவதில்லை என்று நான் நினைக்கிறேன்.) தகப்பன் அந்தப் பிள்ளையைப் பார்த்து, “நீ வெற்றியடையமாட்டாய். உன் சகோதரர்கள் திறமைசாலிகள் ஆனால் நீயோ வாழ்க்கை முழுவதும் தோல்வியுற்றவனாய்தான் வாழ்வாய்” எனக் கூறுவார்.

இது என்ன தெரியுமா? ஒரு சாபம். அதே போல் ஒரு தாயும் தன் பிள்ளைகளிடத்தில் அல்லது பிள்ளைகளைக் குறித்து, அவர்களை பாதிக்கும் வார்த்தைகளை பேசலாம். தங்கள் மீது, பெற்றோரால் கூறப்பட்ட இத்தகைய சாபத்தினால் அவதிப்படுகிறவர்களின் தொகையை அறிந்தால் நீங்கள் வியப்படைவீர்கள்.

## குடும்பத்துக்கப்பால்

பிள்ளைகள் மீதிருக்கும் அதிகாரத்தினாலே சாபங்களைக் கூறக்கூடிய இன்னொரு நபர், ஆசிரியர். ஒரு வேளை தனக்கு ஒத்துப்போகாத ஒரு பிள்ளை ஆசிரியரின் வகுப்பிலிருக்கலாம். “நீ கற்றுக்கொள்ளவே மாட்டாய். உன்னிடத்தில் திறமையில்லை, நீ தேர்ச்சியடைய மாட்டாய்” போன்ற வார்த்தைகளை அவர் பயன்படுத்தலாம். பல முறை, ஆசிரியரினால் பேசப்பட்ட வார்த்தையின் சாபத்தால் பாதிக்கப்பட்ட மக்களோடு நான் ஜெபத்தில் ஒன்றுபட்டுப் போராடி அவர்களை விடுதலை பெறச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சபையின் மீது தனக்கிருக்கும் ஆவிக்குரிய அதிகாரத்தினால், ஒரு போதகருக்குத் தன் மக்களுடைய வாழ்க்கையின் மீது நல்ல முன்னேற்றத்துக்கான வார்த்தைகளையோ அல்லது தவறான, பின்னடைவை ஏற்படுத்தும் வார்த்தைகளையோ பேச வல்லமை உண்டு. ஒரு வேளை சபையில் விசுவாசியோடு போதகருக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட, அந்த நபர் சபையை விட்டு வெளியேறினால், ‘‘நீ எங்கே போனாலும், இந்தச் சபையோடு நீ ஒப்புரவாகும்வரை உனக்கு ஒன்றும் வாய்க்காது’’ என்று தவறான ஆவியில் போதகர் சொல்லலாம்.

மறுபடியும், இது ஒரு சாபமாகும். மதக்குழுக்கள் இந்த விஷயத்தில் பயங்கரமானவைகள், ஒரு சிலரை விட்டு விலகினால் அவர்கள் உடனடியாக உங்கள் மீது சாபமிடுவார்கள். இது, விளைவுகளில்லாத ஒன்றல்ல, உண்மை, என்னை நம்புங்கள்.

## சாத்தானின் வேலைக்காரர்கள்

கிறிஸ்தவர்கள் மத்தியில், சாத்தானைக் குறித்த மனோநிலைகள் இரண்டு எதிர் முனைகளிலுள்ளன. சிலர் சாத்தானை முற்றிலும் அசட்டைபண்ணி, அவன் இல்லாதது போலவே நடிக்க முயற்சிக்கிறார்கள். மற்றவர்கள் அவனைக் குறித்துப் பீதி அடைந்து அவனுக்குக் கொடுக்க வேண்டிய கவனத்தைக் காட்டிலும் அதிக கவனத்தைக் கொடுக்கின்றார்கள். ஆனால் இவ்விரண்டு எதிர் நிலைகளுக்கும் இடையே ஒரு சரியான, வேதாகம சமநிலை உள்ளது.

சாத்தான் என்கிற பெயருக்குப் "பகைவன்" அல்லது "எதிராளி" என்பது அர்த்தமாகும். அவன் தேவனுக்கும், தேவனுடைய மக்களுக்கும், திட்டங்களுக்கும், மாறாத, உறுதியான சத்துருவாயிருக்கிறான். முழு மனுக்குலத்தையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதே அவனுடைய நோக்கமாகும். அவனுடைய முக்கிய உத்தி (தந்திரம்) வஞ்சகம். அதில் அவன் தேர்ச்சிப்பெற்றவனாவான்.

ஏற்கெனவே மனுக்குலத்தின் பெரும்பகுதியின் மீது அவன் ஆதிக்கம் செலுத்துகிறான் - தேவனுக்கு விரோதமாக கலக உணர்வுடைய யாவரும் இதில் அடங்குவர். எபேசியர் 2:2ல் அவன் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்போது கிரியைசெய்கிற ஆவி" என்று விவரிக்கப்பட்டுள்ளான். இவர்களில் பெரும்பாலானோருக்குத் தங்கள் உண்மை நிலையைக் குறித்துத் தெளிவான ஓர் அறிவு இல்லை. அவர்கள் புரிந்துகொள்ளமுடியாத அல்லது கட்டுப்படுத்த முடியாத சக்திகளால் இங்கும் அங்கும் அலசடிப்படுகிறார்கள்.

சாத்தானின் உண்மையான அடையாளம் என்னவென்று அறியாமலேயே, சுய விருப்பத்தினால்

சாத்தானுக்கு தங்களையே ஒப்புக் கொடுத்தவர்களுமுண்டு. வல்லமையையும் பொருளாதார லாபத்தையும் தேடி, சாத்தான் அவர்களுக்குக் கட்டவிழ்க்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பயன்படுத்துவதைத் தங்களில் பயிற்சி செய்கிறார்கள். எல்லா கலாச்சாரங்களிலும், இத்தகைய சாத்தானின் வேலைக்காரர்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. மந்திரவாதி, வைத்தியர், சூனியக்காரன் என்பவைகள் இவர்கள் பொதுவாக பயன்படுத்தப்படும் பெயர்கள். ஆனால் ஒவ்வொரு கலாச்சாரத்துக்கும் அதினதின் பெயர்களுள்ளன.

சாத்தான் உண்டென்றும் அவனுக்கு வல்லமை உண்டென்பதையும் இயேசு மறுக்கவில்லை. ஆனால் சீஷர்களுக்கு அவர் கொடுத்த அதிகாரம், சாத்தானின் வல்லமைகள் மீது அவர்களை வெற்றி பெறச் செய்து, தங்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கும் அவனுடைய எல்லா முயற்சிகளிலிருந்தும் காப்பாற்றும் என இயேசு வாக்களித்தார்.

சாத்தானின் வேலைக்காரர், தேவனுடைய ஜனங்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தும் பிரதான ஆயுதங்களில் ஒன்று, சாபங்கள். எண்ணாகமம் 22-24ல் பாலாக்–பிலேயாமின் சம்பவத்தின் மூலம் இது தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலை யுத்தத்தில் தோற்கடிக்க முடியாதென்று அறிந்த மோவாபின் ராஜா, பிலேயாமைக் கூலிக்குப் பொருத்தி, இஸ்ரவேலைச் சபிக்கும்படி அழைத்தான். இன்றைக்கும் பழங்குடி இனத்தவர்கள் ஒருவரோடொருவர் யுத்தத்துக்கு செல்வதற்கு முன், மந்திரவாதியைக் கொண்டு சத்துருக்கள் மீது சாபமிடுகிறார்கள்.

ஆனால் பிலேயாம் ஒவ்வொரு முறையும் இஸ்ரவேலை

சபிக்க முயன்றபோதும், தேவன் தலையிட்டு, சொல்லப்படவிருந்த சாபங்களை ஆசீர்வாதமாக மாற்றினார். இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பிலேயாம் பேசவிருந்த சாபங்களை வெறும் வார்த்தைகளாக தேவன் கருதவில்லை என உணர்வது மிக முக்கியமானது. இஸ்ரவேலுக்கு அவைகளை ஒரு கடுமையான அச்சுறுத்தலாகக் கண்டு, தேவனே ஒவ்வொரு முறையும் தலையிட்டு, பிலேயாமின் திட்டங்களை குலைத்துப்போட்டார். சாத்தானின் வேலைக்காரரிடமிருந்து தம்முடைய மக்களுக்கு விரோதமாக வரும் சாபங்களை அவர் அசட்டை செய்வதில்லை மாறாக மேலான வல்லமையினால் தன்னுடைய மக்களை அவர் இடைக்கட்டுகிறார்.

அந்த வல்லமையைத் தேவனுடைய மக்கள் பயன்படுத்தும்போது சாபத்தின் பிடி அவர்கள் வாழ்க்கையிலிருந்து தகர்க்கப்படுகிறது, அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் வியக்கத்தக்கவைகளாக இருக்கின்றன. உலகத்தின் பல பகுதிகள், மந்திரவாதிகளின் பொல்லாத ஆவிக்குரிய வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டுள்ளன. அறிக்கையினாலும், ஜெபத்தினாலும், ஆப்பிரிக்காவிலுள்ள மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் அதிசயமான மாற்றங்களை நாங்கள் கண்டிருக்கிறோம். சிரிக்கவே மாட்டாத மக்கள் மிகுந்த சந்தோஷமுள்ளவர்களாக மாறினார்கள். இரவிலிருந்து பகலுக்கு ஏற்படும் மாற்றம் போலிருந்தது.

ஒரு முறை ஒரு நபர் ஒரு கூட்டத்துக்கு வந்தார். அவர் நன்றாக உடை உடுத்தியிருந்தும், தன்னுடைய நன்றி கூறும் வழக்கத்தின்படி, மண்ணினாலே படுத்து உருண்டு நன்றி கூறினார். அவர் சொன்னார், என் வாழ்க்கை முழுவதும் நான் ஒரு பயங்கர பாவியாக வாழ்ந்தேன். பல ஆண்டுகளாக வேதனையிலிருந்தேன்.

ஆனால் இப்போது நான் விடுதலையாயிருக்கிறேன். எனக்கு வேதனையுமில்லை, நான் சந்தோஷமாக இருக்கிறேன்.

நடந்த ஒரே காரியம் என்னவென்றால், அவர் சாபத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டார். நாம் சில விஷயங்களில் அதிக நாகரீகம் அடைந்து விட்டோமென்றெண்ணி, உண்மையான பல காரியங்களோடிருக்கும் தொடர்பை இழந்துவிட்டோம். அவைகளில் நமக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், அவைகளால் நாம் இன்னும் பாதிக்கப்படலாம்.

05

# சுயமாய் இடப்பட்ட சாபங்கள் மற்றும் ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு

*பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகள், நன்மை அல்லது தீமைக்கேற்ற விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதை நாம் பார்த்தோம். நம்மை உற்சாகப்படுத்தி, செயல்படச் செய்யும் வார்த்தைகள் நமக்கு நம்பிக்கை அளித்த பல தருணங்களை அனுபவித்துள்ளோம். இவைகள் மற்றவர்கள் பேசின வார்த்தைகளாகவோ அல்லது நாமே சொல்லிக்கொண்ட வார்த்தைகளாகவோ இருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக, தங்களுடைய வார்த்தைகளினாலேயே தங்கள் மீதும் மற்றவர்கள் மீதும் கேடான விளைவுகளையும் ஏற்படுத்தலாம் என்பதை பலர் உணருவதில்லை. இப்படிச் செய்வதினால், தங்கள் மீதே அவர்கள் சாபங்களைக் கூறிக்கொள்ளுகிறார்கள் என்பதுதான் உண்மை.*

**சுயமாய் இடப்பட்ட சாபங்கள்**

ரெபேக்காள், யாக்கோபின் சம்பவத்தை மீண்டும் நினைவு கூறுங்கள். தன் மூத்த சகோதரன் ஏசாவுக்கு முன்னதாக, தன் தகப்பனிடத்தில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள ரெபேக்காள் யாக்கோபைத் தூண்டினாள். அந்த ஆசீர்வாதம் ஏசாவுக்கு உரியது. யாக்கோபு புத்திசாலி, ஆகையால் என்ன நடக்கக் கூடும் என்பதை முன்பே யோசித்தான்.

> ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப் பார்ப்பார், அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்ளுவேனே என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, உன் மேல் வரும் சாபம் என்மேல் வரட்டும் என்றாள்.
>
> **ஆதியாகமம் 27:12, 13**

இப்படிச் சொன்னதினால் அவள் தன்மேலேயே சாபத்தைக் கூறிக்கொண்டாள். பின்பு அதே அதிகாரத்தில் தனக்கு ஏற்றவர்களல்லாத மனைவிகளை ஏசா திருமணம் செய்ததைக் குறித்து, தன் கணவன் ஈசாக்கினிடத்தில் குறை கூறுகிறாள். தான் விரும்பினபடி காரியங்கள் நடைபெறாததால், ரெபேக்காள் ஈசாக்கிடம்:

> ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன என்றாள்.
>
> **ஆதியாகமம் 27:46**

தன் மீது இரட்டிப்பான சாபத்தை அவள்

கூறிக்கொண்டாள். வாழ்க்கை அவளுக்கு வெறுப்பாயிருந்தது, உயிர் இருந்து ஆவதென்ன என்று கேட்டாள் - மரித்துப் போனால் நல்லது என நினைத்தாள்.

நான் மரித்துப்போனால் நல்லது. வாழ்ந்து பயனென்ன? நான் பிழைக்க மாட்டேன் என்று கூறி தங்கள் மீதே சாபத்தைக் கூறிக்கொண்ட எத்தனை பேரை நாங்கள் சந்தித்திருக்கிறோம் என்பதை நான் கணக்கிட முடியாது. இதைப் போன்ற வாக்கியத்தை நீங்கள் அடிக்கடி சொல்லத் தேவையில்லை. மரணத்தின் ஆவிக்கு ஒருமுறை திறந்த அழைப்பு விடுத்தால் போதும், அநேக அழைப்புகளை கொடுக்கத் தேவையில்லை; அவனே வந்துவிடுவான்.

மரணத்தின் ஆவியிலிருந்து விடுதலைக்காக, வடக்கு அயர்லாந்தில் ஒரு கூட்டத்தில் நான் ஒரு கூட்டு ஜெபம் செய்தேன். 2000 பேர் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில் சுமார் 50 பேர், பெரும்பாலாக இளைஞர்கள், ஒரே நேரத்தில் விடுதலை பெற்றார்கள்.

இந்த நம்பிக்கையற்ற மனநிலை எப்படி உள்ளே நுழைகிறது? "வாழ்ந்து பயனில்லை. வாழ்க்கை எனக்கு என்ன நலனைத் தரும்? நான் மரித்தால் நலமாயிருக்கும்" போன்ற வார்த்தைகளைச் சொல்வதினாலேயே வருகிறது. இவ்வார்த்தைகள் மிக ஆபத்தானவை, ஏனென்றால் நீங்கள் உங்கள் மேலேயே சாபத்தைக் கூறிக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் ஒருவேளை, "நான் அதை உணர்ந்து சொல்லவில்லை" என்று சொல்லலாம், ஆனால் இத்தகைய கவனமற்ற, வீணான வார்த்தைகளைக் குறித்து இயேசு கடும் எச்சரிப்பை கொடுத்தார். மத்தேயு 12:36, 37ல் அவர்,

> **மனுஷன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க**

வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்"

பேசுகிறவர் ''அவைகளை உண்மையில் உணரவில்லை" என்றாலும், அந்த வார்த்தைகளின் தாக்கத்தைக் குறைக்கவோ, இரத்து செய்யவோ மாட்டாது, அவைகளுக்கு கணக்கு ஒப்புவிப்பதிலிருந்தும் அவனை விடுவிக்க மாட்டாது. இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லக் கட்டாயப்படுத்தும் பல சூழ்ச்சிகளைப் பிசாசு செய்ய விரும்புவான். பல நேரங்களில் இத்தகைய வார்த்தைகள் தேவையற்ற காரணங்களுக்காகச் சொல்லப்படும். நீங்கள் எரிச்சலடைந்து அல்லது தைரியமிழந்து, கருத்தை உணராமல், வார்த்தைகளை பேசும்போது, உங்கள் விதியை நீங்களே தீர்மானிக்கலாம்.

சுயமாயிடப்பட்ட சாபத்தின் ஒரு துயரமான, நீண்ட காலம் நீடித்த உதாரண சம்பவம் மத்தேயு 27:24, 25ல் காணப்படுகிறது. பொந்தியு பிலாத்தினால் இயேசு விசாரிக்கப்பட்டார்.

கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் பிரயத்தனத்தினாலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு ஜனங்களெல்லாரும் இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்.

சுயமாயிடப்பட்ட இச்சாபம் சந்ததி சந்ததியாக தொடரும் யூத சரித்திரத்தின் நிகழ்வுகளுக்கு முக்கியமான காரணம் என்பதை அறியாமல் நீங்கள் கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக நிகழ்ந்த யூத சரித்திரத்தை புரிந்துகொள்ளவே முடியாது. யூத மக்களுக்கு நிகழ்ந்த அத்தனை கொடுமைகளும், வேதனைகளும் இதிலிருந்துதான் தோன்றின என்பதைத் தேவனே அறிவார். யாக்கோபுக்கும் அவன் சந்ததியாரான யூத மக்களுக்கும், தங்களைச் சபிக்க நினைக்கிறவர்களிடமிருந்து தேவன் எப்படி பாதுகாப்பை அளித்தார் என்பதை முன்பதாகக் கண்டோம். ஆனால் இச்சாபத்திலிருந்து தேவனே தம்முடைய மக்களைப் பாதுகாக்க முடியாமல் போனது: அவர்கள் தங்கள் மீது சுயமாய் கூறிக்கொண்ட சாபம்.

## வேதத்துக்குப் புறம்பான உடன்படிக்கைகள்

யாத்திராகமம் **23:32**ல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் இஸ்ரவேல் மக்கள் பிரவேசிக்க ஆயத்தமானபோது, அங்கே இருந்த பொல்லாத, விக்கிரகங்களை வணங்குகிற ஜாதிகளைக் குறித்து தேவன் அவர்களை எச்சரித்து, ‘‘அவர்களோடும், அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக” என்றார்.

உடன்படிக்கை என்பது எல்லா உறவுகளிலும் மிக வலிமையான மற்றும் ஆளமான ஓர் உறவாகும். பிசாசும் இதை நன்கு அறிவான். ஆகையால் தன்னால் உருவாக்கப்பட்ட உடன்படிக்கைகளை, அவன் தன்னலனுக்கேற்பப் பயன்படுத்தி, மக்கள் மீது வலிமையான கட்டுப்பாடை பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறான். தீய சக்திகளின் வல்லமைக்குக் கீழிருக்கும் மக்களோடு நீங்கள் உடன்படிக்கை செய்து

கொண்டால், நீங்களும் அதே வல்லமையின் கீழ் வருவீர்கள்.

முக்கியமாக, இரகசிய சங்கங்களின் விஷயத்தில் இது உண்மையாகும். ஃபிரீமேசன்ஸ் என்று அழைக்கப்படும் குழு, உலகளாவிய நிலையில் இதற்கு சிறப்பான உதாரணமாவார்கள். இந்தக் குழுவில் அங்கத்துவம் பெற, ''மேசன் குழுவின் எந்த இரகசியங்களையும் வெளிப்படுத்தமாட்டேன்" என்று தன்னைக் கட்டுப்படுத்தி, ஒரு நபர் மிகவும் கொடூரமான மற்ற நாகரீகமற்ற உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சுயமாயிடப்பட்ட சாபங்களுக்கு, இத்தகைய உறுதிமொழிகளைவிட பயங்கரமான உதாரணங்களை, நாம் வேறெங்கும் காண முடியாது.

மேசன் குழு ஒரு பொய்யான மதம், ஏனென்றால் பொய்யான தெய்வத்தை அங்கிகரிக்கிறது. வேதாகமம் உட்பட, கிறிஸ்தவத்தோடு இணைக்கப்பட்ட பல பொருட்கள் மேசன் மதத்தில் பயன்படுத்தப்பட்டாலும் இது வஞ்சகமாகும். மேசன் மத்தத்தின் தெய்வம் வேதாகமத்தின் தேவனல்ல.

இத்தகைய குழுக்களில் எந்த விதமான ஈடுபாடும், நிச்சயமாக உங்களையும் உங்கள் சந்ததியையும் அழிவின் பாதையில் கொண்டு செல்லும். ஃபிரீமேசன் மதத்தில் பெற்றோர் ஈடுபட்டதால், முடமாக, வளர்ச்சிக் குன்றியதாக, சோகம் நிறைந்த பிள்ளைகளாக இருப்போரின் எண்ணிக்கையை தேவனே அறிவார். அதைக் குறித்து எது வேண்டுமானாலும் செய்து பார்க்கலாம், ஆனால் அந்த விளைவுகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியால் அவைகளை நீங்கள் மாற்ற முடியாது.

எவ்வித உடன்படிக்கையாயிருந்தாலும், அது

வலிமையானதாகவும் கட்டுப்படுத்துகிற ஒன்றாகவும் இருக்கின்றது. கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் செய்யப்பட்ட உடன்படிக்கையைக் தவிர வேறெந்த ஓர் அடிப்படையிலும் மற்ற மக்களோடு உடன்படிக்கை செய்து கொள்ள உங்களுக்குச் சுதந்தரமில்லை.

## ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு அல்லது ஜெபம்.

நம்முடைய வார்த்தைகள் நன்மை அல்லது தீமைக்கேதுவான விளைவுகளை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவைகள் என்பது இதற்குள் உங்களுக்குத் தெளிவாகியிருக்கும். ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சு அல்லது ஜெபம் கூட, சுயமாயிடப்பட்ட சாபங்களுக்கொத்த கேடான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. பல கிறிஸ்தவர்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கும் ஆனால் யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு எழுதி எச்சரிக்கும் போது அவர் கிறிஸ்தவர்களுக்கு எழுதுவது மட்டுமல்ல அவர் கிறிஸ்தவர்களைக் குறித்துதான் எழுதுகிறார்:

> **உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால் நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது.**
>
> **யாக்கோபு 3:14-15**

கீழ்நோக்கிச் செல்லும் இந்தச் இச்செயல் தொடரைப் புரிந்துகொள்வதற்கு அடிப்படை, ''ஜென்ம சுபாவத்துக்குரியது'' என்ற வார்த்தைகளில் அடங்கியுள்ளது. அதற்கான கிரேக்க வார்த்தை "சுகிக்காஸ்" (psuchikos), இது "சுக்கி" (psuche) என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டது. அதற்கு "ஆத்துமா" என்ற அர்த்தமாகும். அதற்கு ஒத்த ஆங்கில வார்த்தையை "ஆத்துமாவுக்குரியது" என்று மொழி பெயர்க்கலாம்.

1 தெசலோனிக்கேயர் 5:23ல், ''சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்று பவுல் ஜெபிக்கின்றார். இங்கே ஒரு முழு ஆள்தத்துவத்தை உருவாக்குகின்ற மூன்று மூல பொருட்களை பவுல் ஒன்றாக சேர்த்து, அவைகளை மேலிருந்து கீழ்வரை வரிசைப்படுத்துகிறார்: ஆவி, அடுத்து ஆத்துமா, பின்பு சரீரம்.

விழுந்துபோன போது, தன்னுடைய கீழ்ப்படியாமையின் நிமித்தமாக, மனிதனுடைய ஆவி தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்பட்டது. அதே நேரத்தில் ஆவியைச் சாராமல் அவனுடைய ஆத்துமா தன்னை தனியாக வெளிப்படுத்த ஆரம்பித்தது. இந்தப் புதிய "இணைப்பில்லாத" உறவு, தேவனுக்கு விரோதமாக மனிதன் செய்த கலகத்தின் விளைவாகவும், வெளிப்பாடாகவுமிருந்தது.

இயற்கையான அல்லது ஆத்துமாவுக்குரிய மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை புரிந்துகொள்ள 1 கொரிந்தியர் 2:14-15 மற்றும் யூதா 16-17 உதவுகின்றன. ஆவிக்குரிய நபர் தேவனுடைய சித்தத்தின்படி செயல்படுகிறவன்

ஆத்துமாவுக்குரிய நபர் (ஜென்ம சுபாவமுள்ளவன்) தேவனோடு நல்லிணக்கத்திலில்லை. அவன் சபையோடிணைந்திருக்கலாம் அல்லது ஒரு கிறிஸ்தவனாக தோன்றலாம். ஆனால், உண்மையில் அவனுடைய கலகம் நிறைந்த மனநிலையும், செயல்பாடும் தேவனுடைய ஆவியைத் துக்கமடையச் செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஒரு நபர் பேசும் வார்த்தைகளில் இது பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்படலாம். ரோமர் 1:29-30ல் தேவனைவிட்டு மனிதன் பிரிந்து போனதின் சில விளைவுகளை பவுல் பட்டியலிடுகிறார். அந்தப் பட்டியலின் ஒரு பகுதி, ''அவர்கள் பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மையினாலும், நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய் இருக்கிறார்கள்''. புறங்கூறுதல் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பது, தேவன் இதை எவ்வளவு பயங்கரமான பாவமாக எண்ணுகிறார் என்பதைக் காண்பிக்கின்றது.

அதே போல், "சகோதரரே, ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் பேசாதிருங்கள்" என யாக்கோபு எச்சரிக்கின்றார் (யாக்கோபு 4:11). ஆகையால் நாம் பேசுவது உண்மையாயிருந்தாலும், நம்முடைய சக விசுவாசிகளைக் குறித்து நாம் பேசவே கூடாது. சத்தியத்தை ஒருவரோடொருவர் பேசுவதை இது அகற்றிவிடாது. ஆனால் சம்பந்தப்பட்ட நபரிடம் நாம் முதலாவது செல்ல வேண்டும் (மத்தேயு 18:15-17ன் படி), மட்டுமல்ல அன்பு மற்றும் தாழ்மையுள்ள மனநிலையில்

செல்ல வேண்டும் (எபேசியர் 4:15ன் படி).

அதே தாழ்மையும், தூய நோக்கமும், ஜெபத்தில் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்துகொள்ள செய்து, எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதை மட்டுமல்ல எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதையும் அறிந்துக் கொள்ளச் செய்யும். பலனுள்ள ஜெபம் செய்வதற்கு நாம் முற்றிலும் பரிசுத்த ஆவியானவரையே சார்ந்திருக்கிறோம். ரோமர் 8:26-27ல் பவுல் இதைச் தெளிவாகக் கூறுகிறார்:

> *அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.*

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

இத்தகைய ஜெபத்தைக் குறித்துச் சொல்வதற்கு அதிகமிருந்தாலும், ஒரு காரியத்தை மட்டும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஜெபம் எப்போதும் தேவனுக்கு ஏற்றதாயிருக்கிறதென்றும் அதின் விளைவுகள் எப்போதும் நன்மையாகவே இருக்கிறதென்றும் அநேகர் முடிவு செய்கிறார்கள். இது உண்மையல்ல.

பரிசுத்த ஆவியானவருக்கும், அவருடைய வழிநடத்துதலுக்கும், நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், நம்முடைய ஜெபங்கள் மாம்சீக நோக்கங்களாகிய

பொறாமை, சுய விருப்பத்தை நிறைவேற்றுதல், வெறுப்பு, கோபம் அல்லது குற்றச்சாட்டுகளால் நிறைந்திருக்கக் கூடும். இத்தகைய மனநிலைகளிலிருந்து புறப்படும் ஜெபங்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் உடன்படவும் மாட்டார், பிதாவாகிய தேவனுக்கு முன்பு கொண்டு செல்லவுமாட்டார்.

ஆகையால் தவிர்க்க முடியாமல் நம்முடைய ஜெபம் யாக்கோபு **3:15**ல் கண்டதுபோல, லௌகிக சம்பந்தமானதும் – (ஆத்துமாவிலிருந்து தோன்றும்) ஜென்ம சுபாவத்துக்குரியதும் – பேய்த்தனத்துக்கு அடுத்ததுமாய் சீர்கேடடைகிறது. ஆத்துமாவிலிருந்து தோன்றும் ஜெபங்களும், ஆத்துமாவிலிருந்து தோன்றும் பேச்சைப்போலவே கேடான விளைவுகளை ஏற்படுத்துகிறது. நாம் யாருக்காக அப்படி ஜெபிக்கின்றோமோ, அவர்களுக்கு விரோதமாகக் காணப்படாத, வகையறுக்க முடியாத அழுத்தங்களை நாம் கட்டவிழ்த்து, அவர்கள் பாரங்களை குறையப்பண்ணாமல், சுமைகளை அதிகப்படுத்துவோம். உங்களுக்காக சிலர் ஜெபிப்பார்கள் ஆனால் அவர்கள் ஜெபிக்காமலிருந்தாலே நலமாயிருக்கும்! இவ்வார்த்தை உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். மற்றவர்கள் செய்ய வேண்டிய ஊழியத்தைக் குறித்தும், அவர்கள் எங்கே செல்ல வேண்டுமென்பதைக் குறித்தும் சிலருக்கு சுயமான பல யோசனைகளிருக்கும். அவர்கள் அதை ஜெபத்தின் மூலம் செயல்படுத்த நினைப்பார்கள். ஆனால், அது தேவனுடைய சித்தமாக இருக்காது. அவர்கள் எந்தெந்த காரியங்களில் உங்களுக்கு விரோதமாக ஜெபிக்கின்றார்களோ, அவைகளைச் செய்யும் போதெல்லாம் சில எதிர்ப்புகளை உணருவீர்கள்.

பயனில்லாத ஜெபம் என்பது இல்லை. நம்முடைய ஜெபங்கள் பலனுள்ளவைகளா இல்லையா என்பதும் கேள்வியல்ல. அவைகளின் விளைவுகள் நன்மையா

தீமையா என்பதுதான் கேள்வி. அவைகளின் மூலம் கிரியை செய்கின்ற வல்லமையே அதைத் தீர்மானிக்கின்றது. அவைகள் உண்மையிலேயே பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தோன்றினவைகளா? அல்லது ஆத்துமாவிலிருந்து தோன்றும் போலியா? ஆத்துமாவிலிருந்து தோன்றும் ஜெபத்தின் வல்லமை உண்மையானதும் ஆபத்தானதுமாயிருக்கிறது. அது ஏற்படுத்துகின்ற விளைவு ஆசீர்வாதமல்ல, சாபம்தான்.

06

# சாபத்தின் ஏழு அறிகுறிகள்

*என்னுடைய தனிப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அனுபவங்களிலிருந்து, சாபம் கிரியை செய்கிறதென்பதை அறிய, பிரச்சனைக்குரிய ஏழு பகுதிகளைப் பட்டியலிட்டிருக்கிறேன். இவற்றில் ஒன்று அல்லது இரண்டு பிரச்சனைகள் மட்டும் இருந்தால், சாபம் கிரியை செய்வதை அவைகள் தனியாக நிரூபிக்க முடியாது. ஆனால் இவைகளில் பல்வேறு பிரச்சனைகள் ஒருவருடைய வாழ்விலிருக்கும்போதோ அல்லது தொடர்ந்து நிகழக்கூடியதாக இருக்கும் போதோ, சாபம் கிரியை செய்வதற்கான வாய்ப்புகள் பெருமளவில் அதிகரிக்கின்றன. இறுதியாக பரிசுத்த ஆவியானவரின் பகுத்தறிவு நமக்கு அவசியமாக இருக்கின்றது. அவர் ஒருவர் தான் சாபத்தை தெளிவாக கண்டறிய செய்யக் கூடியவர்.*

**1. மனமுறிவு அல்லது உணர்ச்சிகளின் முறிவு**

வாழ்க்கையில் ஒரு முறை முறிவு ஏற்பட்டால் அதற்கு

வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் தொடர்ச்சியாக, அடிக்கடி ஒரு குடும்பத்தில் முறிவுகள் ஏற்பட்டால் அக்குடும்பம் சாபத்தின் கீழுள்ளது என்று நிச்சயமாக சொல்லலாம். குழப்பம் மற்றும் மனச்சோர்வு இதனோடு இணைந்திருப்பதை காணலாம். இவைகளின் வேர்கள் ஏதாவது ஒரு மாந்திரீக ஈடுபாடு மற்றும்/ அல்லது பிசாசின் கிரியையிலிருந்து எழும்பும்.

**2. தொடர்ச்சியான அல்லது தீராத வியாதி**

எல்லா நோய்களுமே சாபத்தினால்தான் வரும் என்று அர்த்தமல்ல. தெளிவான மருத்துவ "நோய் கண்டறிதல்" இல்லாத இடங்களில்தான் முக்கியத்துவம் பெறும். சில வியாதிகள் பரம்பரை வியாதிகளாகவோ அல்லது தலைமுறை தலைமுறையாக தொடரும் வியாதிகளாகவோ இருந்தால், சாபத்துக்கான பொதுவான அறிகுறியாகும்.

**3. மலட்டுத்தன்மை, கருச்சிதைவு ஏற்படும் வாய்ப்பு அல்லது சம்பந்தப்பட்ட பெண் உறுப்புகளில் பிரச்சனைகள்**

பல நேரங்களில், பிள்ளைகளை பெற்றெடுத்தலோடு தொடர்புடைய பிரச்சனைகள் குடும்பத்திலுள்ள எல்லா பெண்களையும் பாதிக்கக்கூடும். பெண்கள் இத்தகைய் பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வந்தால் நானும் ரூத்தும், சாபத்தின் தன்மைகளையும், காரணங்களையும் கற்றுக்கொடுத்து அதன் பின்பு அவர்கள் விடுதலைக்காக ஜெபிப்போம். பலர் அற்புதவிதமாக விடுதலை பெற்றதைக் கண்டிருக்கிறோம்.

4. **திருமண உறவுகளின் முறிவு மற்றும் குடும்பத்தால் புறக்கணிக்கப்படுதல்**

இந்த யுகம் முடிவடையும் முன் உலகத்தில் இருக்கக்கூடிய கொடிய காலங்களை மல்கியா 4:5-6 நமக்குக் காண்பிக்கிறது. ஒரு பொல்லாத சக்தி கிரியை செய்து பெற்றோரை பிள்ளைகளைவிட்டுப் பிரித்துக் குடும்ப உறவுகளில் முறிவுகளை ஏற்படுத்துகிறதைத் தீர்க்கதரிசி காண்பிக்கிறார். தேவன் தலையிட்டாலொழிய, குடும்ப வாழ்க்கையை அழித்துக்கொண்டிருக்கும் இச்சாபம் பூமி முழுவதற்கும் பரவுவதைத் தடுக்க முடியாது என எச்சரிக்கின்றார்.

5. **தொடரும் பணப்பற்றாக்குறை**

உபாகமம் 28:47-48இல் இச்சாபத்தின் கிரியை தெளிவாகச் சித்தரிக்கப்படுகின்றது:

> ***சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மன மகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும், தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களை சேவிப்பாய்.***

இவ்விரண்டு வசனங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, ஒரு எளிய முடிவுக்கு நம்மைக் கொண்டு வரும்: செழிப்பு ஓர் ஆசீர்வாதம், தரித்திரம் ஒரு சாபம். பவுல் 2 கொரிந்தியர் 9:8ல் கூறுவது போல, தேவன் தம்முடைய மக்களுக்கு வைத்திருக்கும் சித்தம், ஏராளம் அல்லது அபரிமிதம்.

> **மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும்**

சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

உங்கள் வாழ்க்கைக்காக தேவன் வைத்திருக்கும் சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையானவைகளை விடக் குறைவாக பெற்றிருப்பது, தரித்திரம். மறுபக்கத்தில் தேவனுடைய சித்தத்தை செய்வதற்குத் தேவையான யாவையும் பெற்று - மற்றவர்களுக்கும் கொடுக்கத்தக்க மீதி வைத்திருப்பதே செழிப்பு.

**6. "விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புடையவராக" இருத்தல்**

சில மக்களுக்கு வழக்கத்துக்கு மேலாக, விநோதமான விபத்துக்கள் நேரிடும். இப்படிப்பட்ட மக்களுக்கு விரோதமாக காணப்படாத, விஷமத்தனமான சக்தி கிரியை செய்வதுபோல் இருக்கிறது. புள்ளிவிபர ஆராய்ச்சியினாலே கண்டறியப்படாத ஓர் நிலையாகும். சில காப்பீட்டு நிறுவனங்கள், அதிக ''அபாயகரமான''வர்களென்று கருதுகிறவர்களின் காப்பீட்டுக் கட்டணத் தொகையை உயர்த்தி விடுகின்றன.

**7. தற்கொலை அல்லது இயற்கையல்லாத, அகால மரணங்களின் சரித்திரம்**

இவ்வித தோற்றத்தை எடுத்துக்கொள்ளும் சாபம் ஒரு தனி நபரை மட்டுமல்ல, ஒரு குடும்பம் அல்லது ஜாதி போன்ற பெரிய சமூகப் பிரிவையே பாதிக்கும்.

பொதுவாக இதுவும் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குத் தொடரும்.

மேலே கூறப்பட்டுள்ள ஏழு அறிகுறிகள் முழுமையானதென்று சொல்ல முடியாது. பலவற்றை இதில் இணைக்கலாம். ஆனால் இது வரை வாசித்ததில், உங்கள் சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்க்க இது போதுமானதாக இருக்கும்.

# பகுதி 3

## விடுவிக்கப்படுவது எப்படி ?

*உங்கள் வாழ்க்கை எப்படியோ ஒரு சாபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்பதை காண ஆரம்பித்துவிட்டீர்களா? தேவனுடைய ஆசீர்வாதத்தின் சூரியப் பிரகாசத்தை அடைத்துக்கொண்டிருக்கிற இருளான நிழலிலிருந்து வெளியே வர வழி உண்டோவென்று சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் சாபத்தின் விளைவுகளினால் ஆட்கொள்ளப்பட தேவையில்லை; அவைகள் உங்கள் வாழ்நாட்களில் தோன்றியிருந்தாலும் சரி, அல்லது முன்பிருந்த சந்ததிகளின் செயல்களினால் உண்டானாலும் சரி. எந்த அழுத்தங்களோடு வாழ்ந்துதானாக வேண்டுமென்று நினைத்தீர்களோ, அவைகளிலிருந்து நீங்கள் விடுதலையடையலாம்.*

பல நேரங்களில் சாபத்தின் காரணத்தையோ, தோன்றும் இடத்தையோ கண்டறிவது அவசியமாயிருக்கலாம் ஆனால் எப்போதுமல்ல. அதனால்தான் இரண்டாவது பகுதியில் நான் பல்வேறு சாத்தியக்கூறுகளை விவரித்துச் சொன்னேன். நீங்கள் வாசிக்கும் போதே

பரிசுத்த ஆவியானவர் உங்களோட பேசுவார் என விசுவாசிக்கிறேன். நீங்கள் அறிந்துதான் விடுதலைபெற வேண்டும் என்பது அவசியமல்ல. ஆனால், பல நேரங்களில் நாம் எதிலிருந்து விடுதலை பெறுகிறோம் என்பதையும், அது எப்படி நம்மேல் வந்ததென்றும் நாம் அறியவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் உங்களுக்கு அதை காண்பிப்பாரென்றால், அதற்கேற்ப நீங்கள் செய்ய வேண்டியதை செய்யுங்கள்.

ஆம், வழி உண்டு! ஆனால் ஒரே ஒரு வழிதான் உண்டு: சிலுவையில் இயேசுவின் தியாக மரணம். இப்பகுதியில், நீங்கள் தேவனுடைய வழியை கண்டடைய, எளிய, செயல்முறை விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன - இவைகள், நிழலிலிருந்து சூரிய வெளிச்சத்திற்கு, சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்கு உங்களைக் கொண்டு வரும்.

07

# தெய்வீக பரிமாற்றம்

*சுவிசேஷத்தின் முழுச் செய்தியும் ஒரு ஒப்பற்ற சரித்திர சம்பவத்தை மையமாகக் கொண்டுள்ளது: சிலுவையில் இயேசுவின் தியாக மரணம். இதைக் குறித்து எபிரெயரின் எழுத்தாளர், ''பரிசுத்தமாக்கப் படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்'' (எபிரெயர் 10:14) எனக் கூறுகிறார். இரண்டு வல்லமையான வார்த்தைகள் இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. "பூரணப்படுத்தி" மற்றும் ''என்றென்றைக்கும்''. இவ்விரண்டும் இணைந்து, மனுக்குலத்தின் எல்லா தேவையையும் உள்ளடக்குகிற ஒரு பலியை சித்தரிக்கின்றன. மட்டுமல்ல, இதன் விளைவுகள் காலத்தையும் கடந்து, நித்தியத்துக்குள்ளும் எட்டுகின்றன.*

இதுதான் நம்முடைய விடுதலைக்கான முக்கிய அஸ்திபாரம். சிலுவையில் ஒரு தெய்வீக பரிமாற்றம் ஏற்பட்டது. முதலாவது, நம்முடைய பாவங்களுக்குத் தக்க பலனாயிருந்த எல்லா பொல்லாப்பையும், நம்முடைய

ஸ்தானத்தில் இயேசு ஏற்றுக்கொண்டார். இதற்குப் பதிலாக இயேசுவின் பாவமற்ற கீழ்ப்படிதலுக்கு வரும் எல்லா நன்மையையும் தேவன் நமக்கு அளிக்கின்றார்.

மீட்பின் முழு நோக்கத்தையும் நீங்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக, சிலுவையில் என்னென்ன சாதிக்கப்பட்டதென்று நாம் சுருக்கமாகப் பார்ப்போம்.

**நாம் மன்னிக்கப்படும்படி இயேசு தண்டிக்கப்பட்டார்.**

**நாம் சுகத்தைப் பெறும்படி அவர் காயப்பட்டார்.**

இவ்விரண்டு சத்தியங்களும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன. ஆவிக்குரிய தளத்தில், நம்முடைய பாவத்தினால் உண்டான தண்டனையை இயேசு பெற்றுக்கொண்டதால், நாம் மன்னிக்கப்பட்டு தேவனிடத்தில் சமாதானம் பெற்றுள்ளோம்.

சரீரப்பிரகாரமான தளத்தில், அவருடைய காயங்களால் நாம் சுகத்தைப் பெறும்படியாக, இயேசு நம்முடைய வியாதிகளையும், வேதனைகளையும் எடுத்துக்கொண்டார்.

**நாம் அவருடைய நீதியைக் கொண்டு நீதிமான்களாக்கப் படும்படியாக, இயேசு நம்முடைய பாவத்தினால் பாவமானார்.**

இந்தப் பரிமாற்றத்தின் மூன்றாவது அம்சம் ஏசாயா 53:10ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் தேவன் இயேசுவின் ஆத்துமாவை ''குற்றநிவாரண பலியாக்கினார்" என்று கூறப்பட்டுள்ளது. மோசேக்கு கொடுக்கப்பட்ட குற்ற நிவாரண பலியின் பல்வேறு தோற்றங்களின் விதிகளில் இவை அனைத்தும் முன்கூட்டியே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏசாயா 53:10ஐக் குறிப்பிட்டு, பவுல் 2 கொரிந்தியர் 5:21 இல் பேசும்போது அந்தப் பரிமாற்றத்தின் ஆக்கப்பூர்வமான தோற்றத்தை முன் வைக்கிறார். “நாம் அவருக்குள் (இயேசுவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் (தேவன்) பாவமாக்கினார்.” இந்த நீதியை நாம் ஒருபோதும் சம்பாதிக்க முடியாது, விசுவாசத்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

**அவருடைய ஜீவனில் நாம் பங்கடையும்படி, இயேசு நம்முடைய மரணத்தை மரித்தார்.**

பாவத்தின் நிறைவான பலன் மரணமென்று, முழு வேதமும் வலியுறுத்துகிறது. இயேசு நம்முடைய பாவத்தோடு தம்மை இணைத்துக்கொண்ட போது, மனித பாவத்தினால் உண்டான மரணத்தை அவர் அனுபவிப்பது, தவிர்க்க முடியாத ஓர் நிகழ்வாக மாறியது.

இதற்குப் பதில் தன்னுடைய நிகராக்கும் பலியை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும், அவர் நித்திய ஜீவனை பரிசாக அளிக்கிறார். ரோமர் 6:23ல் இவ்விரண்டு அடுத்தனைகளைப் பவுல் ஒன்றாக முன் வைக்கிறார்: “பாவத்தின் சம்பளம் (நியாயமான பலன்) மரணம்; தேவனுடைய (சம்பாதிக்கப்படாத) கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்”.

**நாம் அவருடைய ஐசுவரியத்தைக் கொண்டு ஐசுவரியவான்களாகும் படி, இயேசு நம்முடைய தரித்திரத்தினால் தரித்திரரானார்.**

உபாகமம் 28:48ல் மோசே பூரண தரித்திரத்தை நான்கு வார்த்தைகளில் அடக்கினார்: பசி, தாகம், நிர்வாணம், சகலமும் குறைவுபடுதல். நாம் அவருடைய நிறைவை அனுபவிக்கும்படியாக, இயேசு சிலுவையில்

இவை அனைத்தையும் அனுபவித்தார்.

பல வேளைகளில் நம்முடைய “நிறைவு” பூலோகத்தில் இருந்த கிறிஸ்துவின் நிறைவைப் போலதான் இருக்கும். நாம் பெரிய அளவில் கையில் பணம் வைத்துக்கொள்ளாமலும், வங்கியில் பெரும் வைப்புத் தொகைகள் இல்லாமலும் இருப்போம். ஆனால் நாளுக்கு நாள் நம்முடைய தேவைகளுக்கும் மற்றவர்களுடைய தேவைகளைச் சந்திக்கத்தக்க கொஞ்சம் மீதியும் பெற்றிருப்போம்.

**நாம் அவருடைய மகிமையில் பங்கடையும்படி இயேசு நம்முடைய அவமானத்தைச் சுமந்தார்.**

**தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்படி, அவர் நம்முடைய தள்ளப்படுதலைச் சகித்தார்.**

மனிதனுடைய பாவத்தினால் ஏற்பட்ட இரண்டு உணர்ச்சிகளின் ரீதியிலான வேதனைகளையும், சிலுவையில் ஏற்பட்ட பரிமாற்றம் உள்ளடக்குகிறது. நம்முடைய பாவத்தினால் நமக்கு ஏற்படும் இரண்டு காயங்கள், அவமானம் மற்றும் தள்ளப்படுதலாவன. இழிவுபடுத்தும் மரண முறைகளில், சிலுவையில் மரிக்கச் செய்வது எல்லாவற்றையும்விட அதிக அவமானத்துக்குரியதாயிருந்தது. பிதாவோடு முறிக்கப்பட்ட உறவின் வேதனையான தள்ளப்படுதலையும், இயேசு சிலுவையில் சகித்தார். பிதாவை நோக்கி அவர் அழைத்தபோது, எந்தப் பதிலுமில்லை. நாம் நன்மையை அனுபவிக்கும்படியாக இயேசு தீமையைச் சகித்தார்.

**நாம் ஆசீர்வாதத்தைப் பெறும்படியாக இயேசு சாபமானார்.**

கலாத்தியர் 3:13-14ல் பரிமாற்றத்தின் இத்தோற்றத்தைப் பவுல் சுருக்கமாகக் கூறுகிறார்:

> மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.

இதுவே நம்முடைய விடுதலையின் ஆதாரம். சிலுவையில் கிறிஸ்து நமக்காகச் செய்ததை விசுவாசிப்பதில் இது ஸ்தாபிக்கப்பட வேண்டும். அவர் பாவமானபடியால் நாம் எப்படி நீதிமான்களாகிறோமோ, அப்படியே அவர் சாபமாக்கப்பட்டதினால் நாம் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும். உபாகமம் 21:23இல் மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று மோசேயின் நியாயப்பிரமாணம்கூறுகிறது. மோசேயின் நியாயப்பிரமாணத்தை அறிந்திருந்த ஒவ்வொரு யூதனும், சிலுவையில் இயேசு தொங்குகிறதைக் கண்ட போது, அவர் சாபமாக்கப்பட்டார் என்பதை அறிந்திருந்தார்கள். அவர் சாபமாக்கப்பட்டதின் காரணம், நம்மை சாபத்திலிருந்து விடுதலையாக்குவதே என்பதற்காக தேவனுக்கு நன்றி!

நீங்கள் விடுதலை பெற்ற பின்னும் இரண்டு நிபந்தனைகளுக்கு தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும் - தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அவர் சொல்லின்படி நடக்க வேண்டும். யோவான் 10:27இல் இயேசு, “என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப்

பின்செல்லுகின்றன' என்று சொன்னார்.

இதுதான் ஆசீர்வாதத்திற்கான நிபந்தனை, ஆனால் ஆசீர்வாதத்தில் வாழ வேண்டுமானால், முதலாவது சாபத்திலிருந்து நீங்கள் மீட்கப்படவேண்டும் - விடுதலையாக வேண்டும். இயேசுவின் மரணத்தின் மூலம் இது சட்டப்பூர்வமாக நம்முடையதாகிவிட்டது. நமக்காக அதைப் பெற்றுத் தந்தார். நம்முடைய வாழ்க்கையில் இது கிரியை செய்வதற்கு, நாம் இதைச் சட்டத்திலிருந்து அனுபவத்துக்குக் கொண்டுவர வேண்டும். இதை எப்படிச் செய்வதென்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சட்டப்பூர்வமான அடித்தளம் ஏற்கெனவே இருக்கிறது. இனி தேவன் நமக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை, தேவன் நமக்காகச் செய்ததை நாம் சுதந்தரிக்க வேண்டும். அவ்வளவுதான்!

08

# விடுதலைக்கான ஏழு படிகள்

*தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்ய விரும்பும் அனைத்தையும் உள்ளடக்குகிற ஒரு வார்த்தை, இரட்சிப்பு* (sozo). *புதிய ஏற்பாட்டில், "சோஜோ"* (sozo) *என்ற மூல கிரேக்க வார்த்தையின் வெவ்வேறான மொழி பெயர்ப்புகளினால், இரட்சிப்பின் கிரியையின் அளவு, சில நேரங்களில், மறைக்கப்பட்டு விடுகிறது. பொதுவாக "இரட்சிக்க" என்று மொழி பெயர்க்கப்படுகிறது ஆனால் பாவ மன்னிப்புக்கு அப்பால் பல விதங்களிலும் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.*

உதாரணத்துக்கு, சரீர சுகத்தைப் பெறும் மக்களின் அனுபவத்தைக் குறித்து அநேகம் முறை இது பயன்படுத்தப்பட்டுள்ளது. பிசாசுகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள் மற்றும் மரணத்திலிருந்து மீண்டும் உயிர்பெற்றவர்களைக் குறித்தும் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. லாசருவின் சம்பவத்தில், மரணத்துக்கேதுவான வியாதியிலிருந்து தேறி வருதலைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

2 தீமோத்தேயு 4:18ல், தன் வாழ்க்கை முழுவதும் நீடிக்கும் தேவனுடைய பாதுகாப்பு மற்றும் சேதமடையாமல் காக்கும் கிரியையை குறித்துப் பவுல் இதே வினைச் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

இரட்சிப்பின் முழு கிரியை ஒரு நபருடைய வாழ்வின் எல்லா பகுதிகளையும் உட்படுத்தும். 1 தெசலோனிக்கேயர் 5:23ல், பவுலுடைய ஜெபத்தில் இது அழகாக விவரிக்கப்பட்டுள்ளது: “சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக”. இரட்சிப்பு முழு மனித தன்மையையும் உட்படுத்துகிறது—ஆவி, ஆத்துமா, மற்றும் சரீரம்— கிறிஸ்துவின் வருகையின் போது, சரீரத்தின் உயிர்த்தெழுதலினால் பூரணப்படுகிறது.

இரட்சிப்பின் எல்லா ஏற்பாடுகளுக்குள்ளும், ஒருவரும் ஒரே நேரத்தில் பிரவேசிக்க முடியாது. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதுதான் இயல்பானது. சில கிறிஸ்தவர்கள் பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டதைத் தாண்டி எங்கும் செல்வதில்லை. அவர்களுக்கு இலவசமாக கொடுக்கப்படும் பல ஏற்பாடுகளைக் குறித்து அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

எந்த வரிசையில் இந்த ஏற்பாடுகளை ஒரு நபர் பெற்றுக்கொளளுகிறார் என்பது, நம்மைத் தனி நபர்களாக பாவித்து நடத்தும் தேவனுடைய இறைமையைப் பொறுத்ததாகும். நம்முடைய மிகப் பெரிய தேவை என்னவென்பதை நாம் அறியாதிருந்தும், எந்த நேரத்திலும், தேவன் அதை அறிவார்.

நம் ஒவ்வொருவருக்கு முன்னும் தேவன் ஒரு தேர்வை வைக்கிறார். ஒரு பக்கம் ஜீவன் மற்றும்

ஆசீர்வாதங்கள், மறு பக்கம் மரணம் மற்றும் சாபங்கள். இஸ்ரவேலைப் போல நாம் தேர்ந்தெடுப்பது எதுவோ, அதுவே நம்முடைய எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது. நம்முடைய தேர்வு, நமக்குப் பின் வரும் நம்முடைய சந்ததிகளையும் பாதிக்கக்கூடும்.

இந்தத் தேர்வைச் செய்தவுடன், நம்முடைய வாழ்க்கையைப் பாதித்துக் கொண்டிருக்கும் எந்த சாபத்திலிருந்தும் விடுதலை பெற நாம் கடந்து செல்லக் கூடும். இதற்கு நாம் எடுக்க வேண்டிய படிகள் என்ன? எல்லோரும் பின்பற்றும்படியாக, தீர்மானிக்கப்பட்ட ஒரே முன் மாதிரி என்பது எதுவுமில்லை. ஆனால் மக்களை விடுதலைக்கு நேராக நடத்துவதில் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஏழு படிகள் மிகவும் பிரயோஜனமானவைகளாக இருக்க நான் கண்டிருக்கிறேன்.

**1. கிறிஸ்துவிலும், உங்கள் சார்பாக அவர் செய்த தியாகத்திலும் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்.**

ரோமர் **10:9-10**இல், கிறிஸ்துவின் தியாகத்தின் பயன்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு, இரண்டு முக்கியமான நிபந்தனைகள் உண்டென்று பவுல் விளக்குகிறார்: தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும், அவரே ஆண்டவரென்று வாயினால் அறிக்கையிட வேண்டும். இருதயத்திலுள்ள விசுவாசம் வாயின் அறிக்கையினால் பூரணப்படும்வரை, பயனுள்ளதல்ல.

அறிக்கையிடுவது, என்ற வார்த்தையின் சரியான அர்த்தம் ‘‘சொல்லுவதை போலவே சொல்லுவது’’ என்பதாகும். வேதாகமத்தின் விசுவாசத்தைப் பொறுத்த வரை, தேவன் தம்முடைய வார்த்தையில் சொல்லியிருப்பதையே நம்முடைய வாயினால்

சொல்லுவது, அறிக்கையிடுதலாகும். எபிரெயர் **3:1**ல் இயேசு, "நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர்" என அழைக்கப்படுகிறார். அவரைக் குறித்த சரியான வேத அறிக்கையை நாம் செய்யும் போது, நம்முடைய சார்பில் அவருடைய ஆசாரிய ஊழியத்தை அது கட்டவிழ்க்கும்.

### 2. உங்கள் எல்லா கலகத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் மனந்திரும்புங்கள்

தேவனுக்கு விரோதமாயிருந்த உங்கள் கலக குணம் மற்றும் அதிலிருந்து தோன்றின பாவங்களுக்காகவும் நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். தேவன் விரும்பும் மனந்திரும்புதலை வெளிப்படுத்தும் ஒரு உதாரண அறிக்கை இதோ:

*என் எல்லா கலகத்தையும், பாவத்தையும் நான் விட்டுவிட்டு, நீரே ஆண்டவரென்று, என்னை உமக்குச் சமர்ப்பிக்கின்றேன்.*

### 3. எல்லா பாவத்துக்காகவும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்

தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்விலே தடைச் செய்யும் மிகப் பெரிய காரியம், மன்னிக்கப்படாத பாவமே. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குத் தேவன் ஏற்பாடு செய்துள்ளார் ஆனால் நாம் அவைகளை அறிக்கை செய்யும் வரை, மன்னிக்க மாட்டார். ஒரு வேளை சாபத்துக்கு உங்களை உட்படுத்தின சில பாவங்களைத் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். அப்படியானால், குறிப்பாக அந்தப் பாவங்களை அறிக்கையிடுங்கள். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும்

உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).

**4. உங்களுக்குத் தீங்கு செய்த அல்லது உங்களுக்கு விரோதமாகத் தவறு செய்தவர்களை மன்னியுங்கள்.**

தேவனுடைய ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்விலே நிறுத்தி வைக்கும் இன்னொரு பெரிய தடை, மற்றவர்களை மன்னிக்காத தன்மை. இன்னொரு நபரை மன்னிப்பது ஒரு உணர்ச்சியல்ல; அது ஒரு தீர்மானம். நீங்கள் யார் யாரை மன்னிக்க வேண்டும் என்பதை நினைப்பூட்டும்படி தேவனிடம் கேளுங்கள். சரியான தீர்மானத்தைச் செய்ய பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஆலோசனை கூறுவார். ஆனால், உங்களுக்காக அந்தத் தீர்மானத்தை அவர் செய்ய மாட்டார். சத்தமாக சொல்லுங்கள்: "தேவனே, நான் -------------ஐ மன்னிக்கிறேன்.

**5. மாந்திரீகம் மற்றும் சாத்தானின் பொருட்களோடிருக்கும் எல்லாத் தொடர்பையும் துறந்து விடுங்கள்.**

இது பல்வேறு செயல்களையும், பழக்கவழக்கங்களையும் உட்படுத்தும். அத்தகைய செயல்களில் நீங்கள் எப்போதாவது ஈடுபட்டதுண்டானால், காணப்படாத ஒரு எல்லையைத் தாண்டி நீங்கள் பிசாசின் இராஜ்யத்துக்குள் பிரவேசித்திருக்கிறீர்கள். நீங்கள் அறிந்தாலும் அறியாவிட்டாலும், அந்த நேரத்திலிருந்து சாத்தான் உங்களைத் தன் பிரஜைகளில் ஒருவராக எண்ணுகிறான். உங்கள் மீது சட்டப்பூர்வமான உரிமை கோரலாம் எனக் கருதுகிறான்.

நீங்கள் இறுதியாகவும், என்றென்றைக்கும் சாத்தானோடிருக்கும் எல்லாத் தொடர்பையும் துண்டித்துப் போட வேண்டும். எந்தக் குறிப்பான செயலைக் குறித்தும் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள் தேவனிடம்

அதை தெளிவுப்படுத்தக் கேட்டுக்கொள்ள வேண்டும். அத்தகைய செயல்களோடு உங்களை இன்னும் இணைக்கக்கூடிய பொருட்களை நீங்கள் அகற்ற வேண்டும். இதில் எல்லா விதமான சொரூபங்களும், தாயத்துக்களும், புத்தகங்களும் உட்படும். இவைகள் எரிக்கப்பட வேண்டும் அல்லது நொறுக்கப்படவோ அழிக்கப்படவோ வேண்டும்.

**6. சாபத்திலிருந்து விடுதலைக்கான ஜெபத்தை செய்ய நீங்கள் இப்போது ஆயத்தமாயிருக்கிறீர்கள்.**

சிலுவையில் தன்னுடைய தியாக மரணத்தினாலே இயேசு உங்களுக்குப் பெற்றுக் கொடுத்த யாவற்றின் மீதும் உங்கள் விசுவாசத்தை நிலைநிறுத்துவது மிக முக்கியமானது. உங்கள் விடுதலையை நீங்கள் "சம்பாதிக்க" தேவையில்லை. நீங்கள் "தகுதியுள்ளவராக" இருக்கத் தேவையில்லை.

**இதற்குத் தகுந்த ஜெபம்:**

***ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, நீர் தேவனுடைய குமாரனென்றும், தேவனிடத்தில் செல்லும் ஒரே வழியாயிருக்கிறீரென்றும், சிலுவையில் என் பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்தீரென்றும் விசுவாசிக்கிறேன்.***

***என் எல்லா கலகத்தையும், பாவத்தையும் நான் விட்டு விட்டு, நீரே ஆண்டவரென்று, என்னை உமக்கு அர்ப்பணிக்கின்றேன்.***

***என் எல்லா பாவங்களையும் உமக்கு முன் அறிக்கையிட்டு, உமது மன்னிப்பைக் கேட்கிறேன் - குறிப்பாக சாபத்துக்கு என்னை உட்படுத்தின எந்த பாவத்துக்காகவும் மன்னிப்பு கேட்கிறேன். என்னுடைய முன்னோர்களின் பாவங்களினால்***

*ஏற்படும் விளைவுகளிலிருந்தும் என்னை விடுவியும்.*

*தேவன் எனக்கு மன்னிக்க வேண்டுமென்று நான் விரும்புவது போல, என்னுடைய சுய சித்தத்தின் தீர்மானத்தினாலே எனக்குத் துரோகம் செய்த அல்லது தீங்கு செய்தவர்களை நான் மன்னிக்கின்றேன். குறிப்பாக நான் . . . . . . . . ஐ மன்னிக்கின்றேன்.*

*மாந்திரீகம் மற்றும் சாத்தானின் எந்தக் காரியத்தோடும் இருக்கும் தொடர்பைத் துண்டிக்கிறேன் - என்னிடத்தில் ''தொடர்பு பொருட்கள்" ஏதாகிலும் இருந்தால் அவைகளை அழித்துப் போட ஒப்புக்கொடுக்கிறேன். சாத்தானுக்கு என் மேலிருக்கும் எல்லா உரிமையையும் முறிக்கின்றேன்.*

*ஆண்டவராகிய இயேசுவே, கல்வாரி சிலுவையில் என் மீது வரக்கூடிய எல்லா சாபத்தையும் நீர் உம்மீது ஏற்றுக்கொண்டீரென்று நான் விசுவாசிக்கிறேன். ஆகையால் என் வாழ்க்கையில் இருக்கும் எல்லா சாபத்திலிருந்தும் என்னை இப்போது விடுவிக்கும்படி வேண்டுகிறேன் - உம்முடைய நாமத்தில் கேட்கிறேன், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ! ஆமென்*

**7. இப்போது, நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என விசுவாசித்து, தேவனுடைய ஆசீர்வாதத்தில் தொடர்ந்து நடைபோடுங்கள் !**

இக்கட்டத்தில், ஆசீர்வாதம் எத்தோற்றத்தில் வரும் அல்லது தேவன் அதை எப்படி அளிப்பார் என்பதைக் குறித்து நீங்கள் ஆராய வேண்டாம். அதைத்

தேவனுடைய கரத்தில் விட்டுவிடுங்கள். அவர் எப்படி, எப்போது செய்வாரோ, செய்ய விட்டுவிடுங்கள். அதைக் குறித்து நீங்கள் கவலைப்பட தேவையில்லை. உங்கள் பங்கிற்கு, உங்களைத் தடையில்லாமல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களுக்குள்ளும், உங்கள் மூலமாயும், தேவன் செய்ய விரும்பும் எல்லாவற்றுக்கும் உங்களை விட்டுக்கொடுங்கள். தேவன் எப்படி பதிலளிப்பார் என்பதைக் காண்பது ஆச்சரியத்தைக் கொண்டுவரும்!

09

# நிழலிலிருந்து சூரிய ஒளியினிடத்திற்கு

*கடந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை நீங்கள் பின்பற்றியிருந்தால், காணப்படாத ஓர் எல்லையை நீங்கள் கடந்துவிட்டீர்கள். பல ஊற்றுகளிலிருந்து தோன்றின பல்வேறு விதமான சாபங்கள் உங்களுக்குப் பின்பாக இருக்கும் பிரதேசத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. உங்களுக்கு முன், தேவனுடைய ஆசீர்வாதமென்னும் சூரிய ஒளியினால் பிரகாசமாக்கப்பட்ட பிரதேசம் உள்ளது.*

ஆராயப்படும்படியாகவும், சுதந்தரிக்கப்படும் படியாகவும் காத்திருக்கின்ற ஓர் சுதந்திரம், கிறிஸ்துவுக்குள் உங்களுக்கு உண்டாயிருக்கிறது. உபாகமம் 28:2-13ல் மோசே கொடுத்த ஆசீர்வாதங்களின் பட்டியலைக் கவனியுங்கள்.

| | |
|---|---|
| உயர்வு | செழிப்பு |
| ஆரோக்கியம் | வெற்றி |
| பெருக்கம் | தேவ தயவு |

இந்த வார்த்தைகளை நீங்கள் மீண்டும் சொல்லும்போது, இச்சுதந்தரத்தை உங்களுக்கு இன்னும் உண்மையாகவும், தெளிவாகவும் விளங்கப்பண்ணும்படி தேவனிடம் கேளுங்கள். ஒவ்வொரு பகுதிக்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவது, உங்கள் விசுவாசத்தின் மிகத் தூய்மையான மற்றும் எளிமையான வெளிக்காட்டுதலாகும். உங்கள் வாழ்க்கையில், சாபத்தோடு ஓர் நெடுநாள் போராட்டம் இருந்திருக்குமாயின், உடனடியாக இருள் அகலாத மனதின் சில பகுதிகள் இருக்கலாம். ஆசீர்வாதங்களை விவரிக்கும் நன்மையான வார்த்தைகளை மீண்டும், மீண்டும் அறிக்கையிடும்போது, சூரிய ஒளியின் முதல் கிரணங்கள் இருளான பள்ளத்தாக்கினுள் பிரவேசித்து, பின்பு முழு பள்ளத்தாக்கையும் வெளிச்சமாக்கும்படி பரவுவது போலாகும்.

இருளான பிரதேசத்திலிருந்து, ஒளி நிறைந்த பிரதேசத்தினுள் கடந்து வருவது, பல தோற்றங்களை எடுத்துக்கொள்ளலாம். எல்லாருக்கும் ஒரே நியதி என்று சொல்லத்தக்க எந்தக் குறிப்பிட்ட மாதிரியுமில்லை. சில மக்கள் உடனடியாக விடுதலையைப் பெற்று, வேதம் வாக்களிக்கும் ஆசீர்வாதங்களுக்குள் நுழைந்து விடுகிறார்கள். அதே அளவிற்கு உண்மையாக இருந்தும், வேறு சிலருக்கு, ஓர் நீண்ட, கடுமையான போராட்டம் இருக்கலாம். குறிப்பாக அவர்கள் மாந்திரீகத்தில் ஈடுபட்டிருந்தால் அப்படியாகும்.

தேவனுடைய கண்ணோட்டத்திற்கும் மனித கண்ணோட்டத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு

சூழ்நிலையில் நாம் அறியாத பல காரியங்களைத் தேவன் தம்முடைய இறையாண்மையில் காண்கிறார். அவர் எப்போதுமே தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காக்கிறார். ஆனால் பெரும்பாலான சூழ்நிலைகளில் இரண்டு காரியங்களைத் தேவன் முன்னறிவிக்க மாட்டார்: ஒருவருடைய வாழ்க்கையில் எப்படிச் செயல்பட போகிறார், எவ்வளவு காலத்தை அதற்கு எடுத்துக்கொள்ளுவார்—என்பவைகளே.

கலாத்தியர் **3:13-14**இல் பவுல் விவரிக்கும் இப்பரிமாற்றத்தின் நன்மையான பகுதியை நாம் காணலாம்.

> *மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*
>
> *ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

வாக்குத்ததத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தைக் குறித்து, பவுல் மூன்று முக்கிய குறிப்புகளைச் சுட்டிக் காண்பிக்கிறார். முதலாவது அது தெளிவற்ற அல்லது வரையறையற்ற ஒன்றல்ல. மிகக் குறிப்பாக உள்ளது: ஆதியாகமம் **24:1**இல் உள்ள ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள். அதின் எல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளது: "தேவன் ஆபிரகாமை சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்".

இரண்டாவதாக, இந்த ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவில் மட்டுமே நமக்கு உண்டாகும். நம்முடைய

சொந்தத் திறமையினால் சம்பாதிக்கப்பட முடியாது. கிறிஸ்து இயேசுவின் மூலம், தேவனோடிருக்கும் உறவின் அடிப்படையில் மட்டுமே அளிக்கப்படுகிறது.

மூன்றாவதாக, இது ‘‘ஆவியைக் குறித்த வாக்குத்தத்தம்’’ என்று விவரிக்கப்பட்டுள்ளது. தெய்வத்துவத்தின் மூன்று நபர்களும் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் - இயேசுவின் தியாகத்தினால் நமக்கென்று கிரயத்தினால் கொள்ளப்பட்ட எல்லாவற்றையும் நமக்கு பகிர்ந்துகொடுக்கும் நோக்கத்தில் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். இயற்கையின் சிந்தை அறியக்கூடியதற்கு அப்பாற்பட்ட காரியமாக இது இருப்பதனால், நம்முடைய முழு சுதந்தரத்திற்குள் பிரவேசிக்கவும், தேவன் நமக்கு அளித்ததை எப்படி பெற்றுக்கொள்ளுவது என்பதையும் அறிய, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையே நாம் சார்ந்துகொள்ள வேண்டும்.

ரோமர் 8:14இல் பரிசுத்த ஆவியானவரின் விசேஷித்த பங்கைப் பவுல் வலியுறுத்துகிறார்: “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்’’. “தேவனுடைய ஆவியினாலே வழிநடத்தப்படுகிறது” என்பது, ஒரே நொடியில் சம்பவிக்கும் ஒட்டுமொத்தமான அனுபவமல்ல. நாம் முதிர்ச்சியடைய கடந்து போகும் ஒவ்வொரு நொடியும் சார்ந்துகொள்ளுகிற ஒன்றாகும்.

ஆவிக்குரிய தடைகளைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் எப்போதும் பகுத்தறிவை அருளுகிறார். இதற்குப் பின்வரும் வழிநடத்துதலுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே, ஆவிக்குரிய தளத்தில் பயனுள்ள முன்னேற்றம் ஏற்படும். கிழக்கு மலேசிய மாநிலமான சாரவாக்கில், இபான் மக்கள் பெரும்பான்மையினர். அவர்களுடைய கலாச்சாரம் இயற்கை மற்றும் ஆவிகளை வழிபடுகிற

பழக்க வழக்கங்களினாலே ஆட்கொள்ளப்பட்டுள்ளது. இதில் சாபங்கள், பாதுகாப்புக்காக மூதாதையரின் தாயத்துக்கள் மற்றும் மந்திரிப்பதும் அடங்கும். இத்தகைய காரியங்களுக்கு அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடுபடுவதை குறித்ததான செய்தி, தற்சமயம் அவர்கள் மத்தியில் ஆச்சரியமான விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. பல கிராமங்களில், இந்தச் செய்தி அறிவிக்கப்படும் போதே, அநேகர் அறிக்கையிட்டு, மனந்திரும்பி ஜெபித்து பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஒரு பெரிய மூட்டை தாயத்துக்கள் (அவர்கள் பாஷையில், ஜிமாட்) சேகரிக்கப்பட்டு, எரிக்கப்பட்டு வருகின்றன.

ஓர் இடத்தில் மட்டும், அதைச் செய்த பின்னும், இன்னும் அகற்றப்படாத ஏதோ ஓர் அரண் இருக்கிறதாக உணரப்பட்டது. அவர்கள் இருந்த அந்தச் சமுதாயக் கூடத்தைச் சுற்றி ஓர் எரிகோ அணிவகுப்பு செய்யும்படி, பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஏவினார். சரியாக ஏழாவது முறை அவர்கள் சுற்றி வரும்போது, “நில்லுங்கள்!” என்று அவர்கள் தலைவர் சத்தமிட்டார். உடனே அவர்கள் கவனிக்கத் தவறின ஓர் தாயித்து கீழே விழுந்தது, அதுவே கிராமத்தில் மிக வல்லமையானதாக இருந்தது. அதையும் அவர்கள் எரித்தபோது, அந்த மக்கள் மீது மிகுந்த சமாதானமும் சந்தோஷமும் உண்டானது.

பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதையும், தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களை தைரியத்தோடு பேசுவதையும் நீங்கள் கற்றுக்கொள்ளும்போது, இதே சந்தோஷமும் சமாதானமும் உங்களுடையதாக மாறும். **8**ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடுதலையின் ஜெபத்தில் எபிரெயர் **3:1**இல் வெளிப்படுத்தப்பட்ட

சத்தியமே முக்கியமானது: இயேசு ‘‘நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியராக” இருக்கிறார். தேவனோடிருக்கும் உறவில் இந்தக் கோட்பாடு எல்லாவற்றையும் ஆளுகை செய்ய வேண்டும். நாம் சந்திக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும், நம்முடைய ஆசாரியராக இருக்கும் இயேசுவின் தொடரும் ஊழியத்தைச் செயல்படுத்த, நாம் ஏற்ற ஓர் ஆவிக்குரிய அறிக்கையை செய்ய வேண்டும்.

பெரும்பாலான சூழ்நிலைகளில் மூன்று விதங்களில் நாம் செயல்படக் கூடும், ஒன்று, நல்ல வேத அறிக்கையை செய்யலாம்; இரண்டாவது, அறிக்கையே செய்யாமல் இருக்கலாம்; மூன்றாவது, தவறான, வேதத்துக்கு விரோதமான அறிக்கையை செய்யலாம். நல்ல அறிக்கை செய்தால், நம்முடைய தேவையைச் சந்தித்து, உதவி செய்யும்படி இயேசுவின் ஊழியத்தைக் கட்டவிழ்க்கிறோம். அறிக்கையே செய்யாவிட்டால், நம்முடைய சூழ்நிலைகளின் கருணைக்கு விட்டுவிடப்படுகிறோம். தவறான அறிக்கை செய்தால், பொல்லாத பிசாசின் சக்திகளுக்கு நம்மை விட்டுக்கொடுக்கிறோம்.

உண்மையான விசுவாசத்தில் செய்யப்படும் வேத அறிக்கைக்கும், கற்பனையான சிந்தனைகளுக்கும் இங்கு வித்தியாசப்படுத்துவது அவசியமாகும். முதலாவது, வேதாகம அர்த்தத்தில், “அறிக்கை” என்பது வேதத்தின் வாக்கியங்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் என்ற வரம்புக்குள் அடங்கிவிடுகிறது. நாம் இதற்கப்பால் செல்ல முடியாது. இரண்டாவதாக, வாக்குத்தத்தத்தோடு இணைந்திருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் அறிக்கை செல்லுபடியாகும். கீழ்ப்படிதலுக்கு இது ஒரு போதும் மாற்று வழியல்ல.

மூன்றாவதாக, அறிக்கை, மனித சித்தத்தினால்

அல்லது மனதளவிலுள்ள விசுவாசத்தினால் இயக்கப்படுகிற ஒரு வசதியான ‘‘முறையாகவோ,’’ “திட்டமாகவோ” அற்பமாக்கப்படக்கூடாது. தேவனை நாம் சுய விருப்பத்தின்படி இயக்க முடியாது. இருதயத்தில் உண்மையான விசுவாசம், பரிசுத்த ஆவியானவரால் மட்டும் உருவாகும். அறிக்கையிடப்பட்டதை நிறைவேற்ற, வல்லமை நிறைந்த வார்த்தைகளை அது உருவாக்கும். நம்முடைய அறிக்கையை விட்டுவிடாமல் நிற்க, எபிரெயர் 10:23 நம்மை உற்சாகப்படுத்துகிறது: ‘‘அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே”.

ஆகிலும், விசுவாசத்துக்கு முழுமையான வெற்றியுள்ள தோற்றத்தை அளிக்க, அறிக்கைக்கப்பால் நம்மைக் கொண்டு செல்லுகிற ஓர் வேதக் கோட்பாடு உண்டு. அதுதான் **‘‘பிரகடனஞ்செய்தல்''**. எவ்வித எதிர்ப்பினாலும், சோர்வினாலும் அடக்கப்படாத ஒரு பலமுள்ள, தைரியமான விசுவாசத்தின் உறுதியை இது குறிக்கும். தற்காப்பின் நிலையிலிருந்து தாக்குதலின் நிலைக்கு கடந்து போவதைக் குறிக்கும்.

ஊழியத்தில் ரூத்தும் நானும், அனுதினமும் எங்களை எப்படி பாதுகாத்துக்கொள்ளுகிறோம் என்று அடிக்கடி கேட்கப்படுகிறோம். தனியாகவோ அல்லது இணைந்தோ தேவனுடைய வார்த்தையைச் சத்தமாக அறிக்கையிடுவதை நாங்கள் ஒரு பழக்கமாக்கிக் கொள்ளுகிறோம். இப்புத்தகத்தின் இறுதியில் நாங்கள் ஒவ்வொரு இரவும் தூங்கும் முன் செய்யும் ஓர் அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. நீங்களும் இதைச் செய்து, நிழலிலிருந்து சூரிய ஒளியினிடத்திற்கு, சாபத்திலிருந்து தேவனுடைய ஆசீர்வாதத்தின் முழுமைக்குக் கடந்து வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

## தனிப்பட்ட ஆய்வு

*சாபத்திலிருந்து ஆசீர்வாதத்திற்குக் கடந்து வருவது எப்படி? என்ற தலைப்பிலுள்ள பாட கேள்விகளுக்கு, இப்போது நீங்கள் இணைப்பு 'அ'-வை பாருங்கள். இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் இணைப்பு 'ஆ'-வில் கொடுக்கப்பட்டுள்ளன.*

# *இணைப்பு - அ*

## கேள்விகள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. எல்லாருடைய வாழ்க்கையிலும் இரண்டு சக்திகள் கிரியை செய்கின்றன: ஆசீர்வாதங்களும் சாபங்களும், ஒன்று பயனுள்ளது, மற்றொன்று தீ------------- வேதம் இவ்விரண்டையும் குறித்து அதிகமாகப் பேசுகின்றது.

2. இதைக் குறித்துத் தம்முடைய மக்களுக்குத் தெளிவாகப் புரியவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதினிமித்தம் அவர்கள் வெ------------- வாழ்க்கை வாழ்ந்து, தேவனுடைய பூரண ஆ-------------அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அப்படி விரும்புகிறார்.

3. ஆசீர்வாதங்களும் சாபங்களும் காணப்படாத ஆவிக்குரிய தளத்துக்குரியவைகள். இரண்டுக்கும் பொதுவான இரண்டு குணாதிசயங்கள் இவைகள்.

   அ. அவைகள் ஒரு த------------- அடுத்ததுக்கு கடந்து செல்லும்.

   ஆ. அவைகளின் விளைவுகள் ஒரு தனி நபரைத் தாண்டி, மற்ற கு------------- உறுப்பினர்களையும், அவர்கள் ச-------------, இனத்தாரையும் முழுத் தேசத்தையும் கூட பாதிக்கும்.

4. ஆசீர்வாதங்களும், சாபங்களும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை உடையவைகள் தே------------- அல்லது சா -------------வல்லமையாக இருக்கலாம்.

தே------------- ஒருவரே எல்லா ஆசீர்வாதத்திற்கும் காரணராக இருக்கிறார்.

5. தேவனுடைய ஆசீர்வாதத்தைத் தனக்கும் தன் சந்ததிக்கும் ஆபிரகாம் பெற்றுக்கொண்டதின் காரணம் என்னவென்றால், அவன் தேவனுடைய சத்தத்துக்குக் கீ------------- தன் மகனாகிய ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுக்கத் துணிந்தான். நாம் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தைக் கேட்பதினால், தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, அதற்குக் கீ------------- வேண்டும்.

6. சாபத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு வழி என்னவென்றால், தே-------டைய சத்தத்தை கே-------------லும், அதற்குக் கீழ்ப்படியாமலும் இருப்பதுதான்; இது க-------------செய்வதாகும்.

7. வாக்குப் பண்ணப்பட்ட தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, கீழ்ப்படியாவிட்டால் இஸ்ரவேலர் மீது வரக்கூடிய பன்னிரெண்டு சாபங்களைத் தேவன் விவரித்தார். அந்த பன்னிரண்டு சாபங்களும் இந்த நான்கு தலைப்புகளின் கீழ் வருகின்றன.

   விக்கிரக ஆராதனை மற்றும் பொ-------------தெய்வங்களை வணங்குவது.

   பெற்றோரைக் க-------------படுத்துவது.

   தவறான அல்லது இயற்கையல்லாத பா------------- உறவு.

   பெ------------- மற்றும் உதவியற்றவர்களுக்கு விரோதமான அநியாயம்.

8. வேதாகமம் மாந்திரீகத்திற்கும் அதின் கிளையாகிய பி------------- விரோதமாக எச்சரிக்கிறது. இதில்

குறிச்சொல்லுதலும் அடங்கும். இவை எல்லாம் சாத்தானிடம் விசாரிக்கும் காரியங்கள். இவை அனைத்தும் கீழ்ப்படியாமையின் பாவத்துக்கு உட்படுத்தும் (ஏனென்றால் தேவன் ஒருவரே மெய்யான தேவன் என்று பத்து கட்டளைகளில் முதல் கற்பனை கூறுகிறது).

## சரி / தவறு என்று குறிப்பிடுக:

**9.** அதிகாரத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது சாபமிடலாம் அல்லது கீழ்க்காணும் விதங்களில் சாபம் ஏற்படலாம்:

பெற்றோர் சரி/தவறு

தலைவர்கள் சரி/தவறு

சுயத்தைச் சார்ந்திருப்பது சரி/தவறு

குடும்பத்தில் இளையவர்கள் சரி/தவறு

உங்கள் அரசு சரி/தவறு

மத பிரிவுகள் சரி/தவறு

ஆசிரியர்கள் சரி/தவறு

சாத்தானின் ஊழியக்காரர்கள் சரி/தவறு

சுயம் - நம்முடைய பேச்சினாலோ அல்லது "ஆத்துமீக" ஜெபங்களினாலோ சரி/தவறு

ப்ஃரிமேசன்ஸ் போன்ற இரகசிய சங்கங்களினால் சரி/தவறு

**10.** மேலே உண்மையென்று நீங்கள் கண்டவைகளில், வேதத்தில் தேவன் தம்முடைய ஜனங்களை எவ்வித சாபத்திலிருந்து காப்பாற்றுவது மிகக் கடினமாக இருந்தது? --------------------

11. சாபத்தின் ஏழு அடையாளங்களாவன:

மன முறிவு அல்லது உணர்ச்கிளின்

தொடர்ந்து ஏற்படும் தீராத வியாதி

மலட்டுத்தன்மை, கருச்சிதைவு ஏற்படும் தன்மை அல்லது இவைகளோடு சம்பந்தப்பட்ட பெண்மை பிரச்சனைகள்

திருமண உறவில் முறிவு அல்லது குடும்பத்தால் புறக்கணிக்கப்படுதல்

தொடரும் பணப் பற்றாக்குறை

அடிக்கடி விபத்துக்கள் ஏற்படும் தன்மை

தற்கொலை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அல்லது அகால மரணங்களின் வரலாறு

*உங்களுக்கு அல்லது உங்களுக்குப் பிரியமானவர்களுக்கு எந்த சாபங்களிலிருந்து விடுதலை தேவைப்படுகிறது என்று எழுதுங்கள்.*

பெயர்:........................................................................................

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..........................................

பெயர்:........................................................................................

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..........................................

பெயர்:........................................................................................

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..........................................

பெயர்:........................................................................................

முறிக்கப்பட வேண்டிய சாபம்:..........................................

**சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:**

12. நற்செய்தி என்னவென்றால் தேவன் தம்முடைய ஊழியக்காரரை சாபத்தின் கீழ் இருக்க அனுமதிப்பதில்லை. நம்முடைய விடுதலை இதைச் சார்ந்து இருக்கிறது.

    a. நற்கிரியைகள்

    b. நம்முடைய மனோ நிலை

    c. வார்த்தையை தியானிப்பது

    d. சிலுவையில் கிறிஸ்து செய்தி மீட்பின் திட்டத்தில் விசுவாசம்

13. தேவன் நமக்குச் சாபத்திலிருந்து விடுதலை கொடுப்பது, நம்முடைய வாழ்க்கையின் எந்தப் பகுதி அல்லது எந்தப் பகுதிகளையும் உட்படுத்துகிறது ?

    a. நம்முடைய ஆவி மட்டும்

    b. எல்லாப் பகுதிகளும் - ஆத்துமா, சரீரம் மற்றும் ஆவி

    c. நம்முடைய சரீர ஆரோக்கியம்

    d. நம்முடைய ஆத்துமா

14. சாபத்திலிருந்து விடுவிக்கப்பட நாம் செய்ய வேண்டியது (சரியானதைக் குறிப்பிடவும்)

    a. ஜெபிப்பது

    b. கர்த்தரின் சத்தத்தை / எழுதப்பட்ட வார்த்தையை அறிந்து, கேட்டு, கீழ்ப்படிவது

    c. அடிக்கடி சபையில் உள்ள தலைவரிடம் ஜெபத்துக்காகச் செல்லுவது.

    d. நம்முடைய முன்னோர்களிடம் அவர்களுடைய பின் வாழ்க்கையைக் குறித்துப் பேசுவது.

**சரி அல்லது தவறு என்று குறிப்பிடவும்.**

15. சாபத்திலிருந்து விடுதலை பெற, தேவன் விரும்பும் ஏழு படிகள் எவைகள்.

1. சபைக்கு அடிக்கடி போக வேண்டும். சரி/தவறு
2. கிறிஸ்துவின் பேரிலும் அவர் உங்கள் சார்பாக சிலுவையில் செய்த தியாகத்தையும் பேரிலும் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். சரி/தவறு
3. எல்லா கலகத்திலிருந்தம் பாவத்திலிருந்தும் மனந்திரும்ப வேண்டும். சரி/தவறு
4. பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சரி/தவறு
5. நற்கிரியைகளும், மற்றவர்களுக்கு உதவி செய்வதும் உங்களை விடுதலையாக்கும். சரி/தவறு
6. உங்களைக் காயப்படுத்தின அல்லது தவறாக நடத்தின மக்களை மன்னிக்க வேண்டும். சரி/தவறு
7. மாந்திரீகம் அல்லது பிசாசின் காரியங்களோடு இருக்கும் எல்லாத் தொடர்பையும் முறித்துப்போட வேண்டும். சரி/தவறு
8. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விடுதலையின் ஜெபத்தைச் செய்ய வேண்டும். சரி/தவறு
9. நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசித்து, தேவனுடைய ஆசீர்வாதத்தில் தொடருங்கள். சரி/தவறு
10. பத்துக்கட்டளைகளை மனப்பாடம் செய்ய வேண்டும். சரி/தவறு

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

16. நம்முடைய வாழ்க்கையில் விடுதலையைச் சுதந்தரிப்பது என்பது ந.............. முடிவாகும். நாம்

செய்யும் தீர்மானம் நம்முடைய ச.........................
எதிர்காலத்தை பாதிக்கக்கூடியது.

17. உபாகமம் 28:2-13இல் கூறப்பட்டுள்ள தேவனுடைய ஆசீர்வாதங்களின் பட்டியல்:

உ...........................

ஆ.........................

பெ.......................

செ.......................

வெ......................

தேவ....................

18. ப........................... ஆ.............................. நாடினால், எந்தெந்தப் பகுதிகளில் உங்களுக்கு விடுதலை தேவை என்று காண்பிப்பார். எவ்வளவு சீக்கிரம் விடுதலை பெறுவீர்கள் என்பது ஒவ்வொரு தனி நபருக்கும் வித்தியாசமாக இருக்கும். சில நேரங்களில் உ.................. விடுதலை கிடைக்கும்.

19. நாம் விடுவிக்கப்பட எல்லாப் படிகளையும் நிறைவேற்றினவுடனே, நாம் தேவனுடைய வார்த்தையை அ............... வேண்டும். வாக்குத்தத்தத்தோடு இணைக்கப்பட்ட நிபந்தனைகளை நாம் நிறைவேற்றினால்தான் அறிக்கை பிரயோஜனமுள்ளது. கீ......................க்கு அறிக்கை ஒருபோதும் மாற்று வழி ஆகாது.

20. வேத வசனங்களைச் சத்தமாகப் பேசி அறிக்கையிட்டால், அவ்........................கள் வல்லமையினால் நிறைந்திருக்கும். நாம் எப்போதும். ஆசீர்வாதத்துக்காகவும், வெற்றிக்காகவும் தேவனுக்கு ந............. செலுத்த வேண்டும்.

# இணைப்பு ‘ஆ‘

## விடைகள்

1. தீமையானது
2. வெற்றி, ஆசீர்வாதத்தை
3. (a) தலைமுறையிலிருந்த
   (b) குடும்ப, சமுதாயத்தையும்
4. தேவனுடைய, சாத்தானுடைய, தேவன்
5. கீழ்ப்படிந்த (ஆதியாகமம் 22:15-16) கீழ்ப்படிய
6. தேவனுடைய, கேட்காமலும், கலகம்
7. பொய்யான, கனவீன, பாலியல், பெலவீனமான
8. பில்லிசூனியத்துக்கும்
9. பெற்றோர்கள் - சரி
   தலைவர்கள் - சரி
   சுயத்தைச் சார்ந்திருப்பது - சரி
   குடும்பத்தில் இளையவர்கள் - தவறு
   உங்கள் அரசு - சரி
   மதப் பிரிவுகள் - சரி
   ஆசிரியர்கள் - சரி
   சாத்தானின் ஊழியக்காரர்கள் - சரி
   சுயம் - நம்முடைய பேச்சினாலோ அல்லது "ஆத்துமீக" ஜெபங்களினாலோ - சரி
   ஃப்ரிமேஷன்ஸ் போன்ற இரகசிய சங்கங்களினால் - சரி
10. சுயமாய் இடப்பட்ட சாபங்கள் (ஆதியாகமம் 27:36)

12. (d)

13. (b)

14. (b)

15. 1, 5, 10 தவறு, 2, 3, 4, 6, 7, 8, 9 - சரி

16. நம்முடைய, சந்ததியின்

17. உயர்வு
    ஆரோக்கியம்
    பெருக்கம்
    செழிப்பு
    வெற்றி
    தேவ தயவு

18. பரிசுத்த ஆவியானவரை, உடனடியாக (ரோமர் 8:14)

19. அறிக்கையிட, கீழ்ப்படிதலுக்கு

20. வார்த்தைகள், நன்றி

## *தேவனுடைய பாதுகாப்பிலுள்ள நம்பிக்கையை அறிக்கையிடுதல்*

எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். எனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நான் குற்றப்படுத்துவேன்.

இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்.

எனக்கு விரோதமாக பேசப்படுபவைகள் எவைகளோ ஜெபிக்கப்படுவது எதுவோ, எனக்கு யார் தீங்கு செய்ய முற்படுகிறார்களோ அவர்களை நான் மன்னிக்கிறேன். (அவர்களின் பெயர்கள் தெரிந்தால் இங்கு கூறவும்)

அவர்களை மன்னித்தது மட்டுமன்று கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களை நான் ஆசீர்வதிக்கிறேன்.

நீரே, நீர் மட்டுமே என் தேவன் என்று அறிக்கையிடுகிறேன். உம்மையன்றி எனக்கு வேறு யாருமில்லை. நீதியுள்ள தேவனே, இரட்சகரே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரே உம்மை நான் ஆராதிக்கிறேன்.

நிபந்தனையற்ற கீழ்ப்படிதலுடன் நான் என்னை புதிதாய் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

என்னை ஒப்புக் கொடுத்தது மட்டுமன்றி, உமது வார்த்தையின்படி செய்ய ஒப்புக் கொடுக்கிறேன். நான் பிசாசையும், அவன் தாக்குதல்களையும், எல்லா

அழுத்தங்களையும், வஞ்சனைகளையும், எனக்கு விரோதமாய் பயன்பட இருக்கும் கருவிகளையும் பிரதிநிதிகளையும் எதிர்த்து நிற்கிறேன்.

அவைகளுக்கு நான் என்னை ஒப்புக் கொடுப்பதில்லை. அவைகளை எதிர்க்கிறேன்; என்னைவிட்டு விரட்டுகிறேன். இயேசுவின் நாமத்தினால் என்னைவிட்டு புறம்பாக்குகிறேன். சிறப்பாக: பெலவீனம், தொற்றுநோய், வலி, வீக்கம், வேண்டாத வளர்ச்சி, ஒவ்வாமை, வைரஸ்கள், எல்லாவித பில்லிசூனியங்கள், எல்லாவித மன உளைச்சல்கள் (உனக்கு விரோதமாக செயற்படும் நோயையும் அல்லது தீய ஆவியையும் பெயர் சொல்லி இங்கு குறிப்பிடு).

இறுதியாக, கர்த்தாவே இயேசுவின் சிலுவையின் தியாக மரணத்தினால் நான் சாபத்திலிருந்து விடுபட்டு நீர் ஆபிரகாமை ஆசீர்வதித்த எல்லா ஆசீர்வாதங்களுக்குள்ளும் கடந்து வருகிறேன்: உயர்வு, ஆரோக்கியம், இனப்பெருக்கம், வளமை, வெற்றி, தேவ நட்பு, தேவ தயவு ஆகிய ஆசீர்வாதங்களுக்குள் கடந்து வருகிறேன்.[2]

ஆமென்.

---

[1] *மத்தேயு 5:43 45, ரோமர் 12:14*

[2] *கலாத்தியர் 3:13,14, ஆதியாகமம் 24:1.*